உ

வேலுமயிலுந்துணை.

மதுரை மீனாட்சியம்மை மீது

சந்தத்திருவடி மாலையும்,

திருவடிப் பத்தும்,

சோழவந்தான்

சிதம்பரவிநாயகர் மாலையும்.

இவை

சோழவந்தான் வித்துவான்

அ. சண்முகம்பிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை

மு. ரா. கந்தசாமிக்கவிராயரால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிடப்பெற்றன.

1914.

உ

குமரன் றுணை.

முகவுரை.

மதுரையைச் சார்ந்த சோழவந்தானூர் வித்துவான் ஸ்ரீமத் அ. சண்முகம் பிள்ளையவர்களைத் தமிழ்நாடு நன்கறியும். இவர்கள் தமிழிலக்கிய இலக்கணங்களிற் றேர்ச்சி மிக்கவராய், எல்லாப்புலவர்களும் மிகவருந்திச் செய்யப்பெறுதலால் மிறைக்கவி யெனப்பெயர்பெற்ற சித்திரகவிகளை அதிசுலபமாக இயற்றும் பேராற்றலுற்றவராய், எந்த விஷயங்களையும் தருக்கமுறை பிறழாமலும் அவையஞ்சாமலும் கேட்போர் வேட்குமாறு இனிதெடுத்துரைக்கும் சொல்லாற்றல் படைத்தவராய் விளங்குகின்றார்களென்பதை இப்போதுள்ள தமிழ்ப்புலவர்கள் யாவருமுணர்வர்.

"இன்னிசை யிருநூறு" என்ற நீதிநூலொன்றும், "மாலைமாற்றுமாலை" என்ற சித்திரகவி நூலொன்றும் இவர்களால் இயற்றப்பெற்று முன்னரே வெளிவந்துள்ளன. இவற்றுள் மாலைமாற்றுமாலைக்கு யாமே உரையெழுதி வெளியிட்டுள்ளோம். மேற்கூறப்பெற்ற இருநூல்களையும் பார்த்த தமிழ் வித்துவான்கள் பல்லோர் அவற்றின் அருமை பெருமைகளைப் பாராட்டி எமக்கு வரைந்துள்ளார்கள்.

இப்பொழுது இந்த வித்துவ ரத்தினமாகிய நமது பிள்ளையவர்கள் மதுரை மீனாட்சியம்மை மீது "சந்தத்திருவடிமாலை" என்னும் பெயர் புனைந்து யாத்த சந்தப்பாக்கள் 32-ம் அவற்றிற்கு அவர்களே யெழுதிய குறிப்புரையும்; "திருவடிப்பத்து" என்னும் பெயரிட்டியாத்த பத்து வெண்பாக்களும்; தமது பிறப்பிடமாகிய சோழவந்தான் "சிதம்பர விநாயகர்மாலை" என்னும் பெயரிட்டியாத்த 30 கொச்சகப்பாக்களும் ஒருங்கு சேர்த்து அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளன.

முகவுரை.

சந்தத்திருவடிமாலையில் சந்தம் நோக்கிச் சொற்களை நீட்டல் குறுக்கல் தொகுத்தல் விரித்தல் ஆதிய விகாரப்படுத்தாமல் விழுமிய பொருள்பயக்கும் முழுமுழுச் சொற்களாகவேதொடுத்துள்ளார்கள். சந்தம் அமைத்து அதற்கியையச் செய்யுளியற்றுதல் விலங்கிட்டுக் கொண்டு நடனமாடுவதை யொப்பதொன்றாகவும் இச்சந்தப்பாக்கள் ஆக்கியோர் கருதிய பொருட்போக்குக்குச் சிறிதும் முட்டுப்பாடுறாது செவ்விது செல்லுந் தன்மையனவாக அமைந்துள்ளன. இந்த நயத்தை ஊன்றியுணர்வா ரெவரும் வியவாதிரார். அன்றியும், நகர் வருணனை, வையைநதி வருணனை, தண்ணீர்க் குழாய்கள், மின்சார விளக்குகள் ஆகியவற்றின் வருணனைகளும் நன்கு அமைந்துள்ளன. அம்பிகைமீது இத்தகைய சந்தப்பா நூலொன்று இதுகாறும் யாமறிந்திலம். ஆதலின் எமது பரமமாதாவுக்கு வாய்த்ததோர் நவமணியணியாகவே கொண்டு தமிழ் மக்கள் மகிழ்வாரென்பது எமது துணிபு.

ஏனைய இருவகை நூல்களும் பிள்ளையவர்களின் பத்தித் தன்மையை மிக்கு விளக்குவன வாதலுடன் சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பப் பெற்றுள்ளன. இவர்களியற்றிய ஏகபாத நூற்றந்தாதி யுரையும் விரைவில் வெளிவரும்.

சர்வலோக மாதாவாகிய ஸ்ரீ மீனாட்சியம்மை திருவருளால் பிள்ளையவர்கள் அரோக திடகாத்திரராய் எல்லா நலன்களையும் பெற்று இன்புற்று வாழ்வார்களாக. இப்புத்தகம் வேண்டுவோர்க்கு இனாமாகவே கொடுக்கப்பெறும். சுபம் சுபம்.

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்,

மதுரை.

சாற்றுக் கவிகள்.

மதுரை திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீன வித்துவானும்,
செயிண்டுமேரி ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய ப்ரும்மஸ்ரீ

மு. கோவிந்தசாமிஐயரவர்களியற்றிய

செய்யுட்கள்.

திருவளரும் பாண்டிவள நாடாளும் வழுதிகுலஞ்
 சிறக்க நீதி
யுருவளர வுலகையெலா மொருகுடைக்கீழ்ப் புரந்தருள
 வோங்கன் மன்னன்
கருவளரா தவதரித்த வங்கயற்கண் ணம்மைதிருக்
 கஞ்சத் தாளில்
மருவளரும் பூமாலை யெனச்சந்தப் பாமாலை
 வனைந்தான் மன்னோ. (க)

அன்னவன்றான் யாவனெனி லிலக்கியமுங் காப்பியமு
 மளந்து கற்றோன்
மன்னவரி னவைமுந்தி யிருக்குமொரு சீருடையான்
 வையம் போற்றச்
சொன்னவமார் மாலைமாற் றாதியநூல் பலநவின்றோன்
 சுருங்கச் சொல்லின்
துன்னவரும் வாரியுண்ட முனிநிகர்வான் சண்முகனென்
 சுமுகன் றானே. (உ)

கண்டமுத முதலாய தித்திக்கும் பொருளனைத்துங்
 கலந்தாற் போலப்
பண்டருண கிரிநாத ரருள்வெள்ளத் தாழ்ந்துரைத்த
 பாவி னங்கள்
கொண்டசுவை யனைத்தையுநன் காய்ந்துசிறப்பேய்ந்தவையைக்
 கூட்டி யந்த
அண்டர்பிரா னன்னையடிக் களித்தானென் றுரைப்பதலா
 லறைவ தென்னே. (௩)

சா

சாற்றுக்கவிகள்.

கோயிலூர் ஆதீனம் ஸ்ரீமத்

சுப்பையா சுவாமிகள் இயற்றிய

செய்யுள்.

என்னையின் றருளு மிருந்தவை விருந்து
　　ணெழிற்கயல் விழித்தனிக் குமரி
அன்னையா ரடியி லரசஞ்சண் முகவேள்
　　ளற்புதத் திருவடி மாலை
தன்னையே யருச்சித் தணிந்தனன் வணங்குந்
　　தனயருஞ் சுரர்களுந் தவரும்
பின்னையே முதல மாதரும் பிறரும்
　　பிறங்கிய முடிக்கொள மாதோ.

மதுரை வித்தியாபாநுப் பத்திராதிபர்

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்

இயற்றிய செய்யுள்.

தருவளர் சனகைப் பதியுமென் னுளமுஞ்
　　சார்ந்துவாழ் சண்முக நாமத்
தொருபெரும் புலவன் அங்கயற் கண்ணி
　　யுளமுவந் தணிதரச் சந்தத்
திருவடி மாலை திருவடிப் பத்துஞ்
　　சிதம்பர விநாயகர் மகிழ
மருவுமோர் மாலை தனையுநன் கிசைத்தான்
　　மற்றவன் வாழிய மகிழ்ந்தே.

உ

தேவி துணை.

மதுரை மீனாட்சியம்மை

சந்தத் திருவடிமாலை.

தனன தந்தன தான தானன
தனன தந்தன தான தானன
தனன தந்தன தான தானன தனதானு.

உலக மெங்கணு மூழி வானவர்
உரக ரும்புவி யோரு மேவல்செய்
உயர்பெ ருந்தனி யாணை யேசெல ஒருகோடி
உழுவன் மங்கையர் காம னேயென
உடல்கு ழைந்திருள் யாம நாவினும்
உவகை கொண்டணை போக மேகொள ஒருவாதே
பலரு மன்பொருள் காலை தோறும்வை
பவமு டன்பெற நாளு மேமதி
பளகி னுண்கலை யாய வாழ்நிலை படைசேய்சீர்
பலபொ ருந்தினு மேயு ளுதருள்
பரவு மன்பிலை யேமெ லைமது
பரவி முன்பெற நாடி யேயடி பணிவேனே
நிலவு வெங்கண ராவி ராவிய
நெடிய செஞ்சடை தாதை போலுறு
நிமல வெங்கர ணர்வி நாயகர் நினையாதே
நினைவின் வந்தெனை மேவு நாயகர்
நெறியி னைக்கிடு காலை யாழ்துயர்
நிலைகு லைந்திட வாழ்வு தானருள் நிதிபோல்வார்
குலவு மொண்கலை யாவு மேயுணர்
குமர ரிங்கிவர் பால ராவளர்
குமரி சங்கரி தேவி யாமளை குலமாதா

குடிகொ டென்குடி யாள நானுறு
குடில நெஞ்சினு மேவு நாரணி
குயின்மு ழங்கிடு கூடன் மாநகர் உமையாளே.

(குறிப்புரை) உழுவல் - எழுமையுந் தொடர்ந்த அன்பு. மன் - மிகுதி. ஏளுகு - குற்றம். அது - அன்பு. தாதை - சிவன். நெறி - நல்வழி.

உலக மெங்கணும் ஊழிவரை ஆணைசெல்ல மங்கையர் போகங்கொள்ள பலரும் மன்பொருள் பெற மதிகலையினையாய வாழ் நிலையும் படையும் சேயும் சீரும் பிறபலவும் பொருந்தினும் அன்பிலையாயின் என்னும்! ஆதலின் அது பெறப்பணிவே னெனமுடிக்க. (க)

தத்தன தனதன தான தந்தன
தத்தன தனதன தான தந்தன
தத்தன தனதன தான தந்தன தனதானா.

ஒத்துறு வளிநிலை தேய்த லின்றியுள்
மத்திய சுழுனையி னூடி சென்றிட
உய்த்தொளிர் மதியமு தார வுண்டுடல் அழியாதே
உட்பகை கருமமு மூணு றங்கலும்
விட்டிரு வினையிருண் மாயை வென்றொளிர்
உத்தமர் தமதருண் மோன சிந்தையொ டொழியாதே
நித்தமும் வனிதையர் காதல் கொண்டவர்
முத்தெனு மெயிறுறு பான முண்டயல்
நிற்றலை மகிழுமெ னீன சிந்தையும் ஒருநேரா
நிற்குமு னொளிதிகழ் பாத பங்கயம்
நித்தில மணியன நேய வொண்கவி
நித்தமு மிசையொடு பாடி வந்தனை புரிவேனே
வித்தையொ டுறுபொரு ளாயுண் மைந்தரும்
முத்தியும் விழையினு மீயு மொய்ம்பினை
வெற்றிகொள் பரசுடை வீரி யந்தரி விடையூர்வான்
மெய்ப்பொருள் பரசிவன் மேனி பங்குகொள்
உத்தமி பகவதி வாலை யம்பிகை
வித்தகி நிருமலை வேத புங்கவி விஜயோடே

சித்தர்கள் வழிபடு தேவி சுந்தரி
சததிபொன் மலைசுதை தாய்ப ரம்பரை
தெற்கிறை மகளென மேவு குண்டலி திரிசூலி
திக்குட னருவுரு கால மம்புவி
சத்தமொ டிசைபொரு ளாய சங்கரி
சிற்பரை தமிழ்வளர் கூட லம்பதி உமையாளே.

(கு-ரை) வளி - இடை கலை பிங்கலையி லியங்குங்காற்று. தேய்தல் - கால் விரல் கழிதல். இருள் - ஆணவ மலம். தெற்கிறை - தென்னவன், மலையத்துவசன். (௨)

தனனத் தனதன தத்தனந் தானன
தனனத் தனதன தத்தனந் தானன
தனனத் தனதன தத்தனந் தானன தனதானா.

மதியிற் பணிபல சுற்றிமந் தாகினி
மறையச் சடிலமு டித்தநஞ் சார்களன்
வளைசக் கரமுறு மத்தனம் போருகன் இருவோரும்
வலிதிற் பிலநப முற்றியுங் காணரு
மலர்பொற் பதமுடி நித்தனைந் தானனன்
மணவற் புதவினை முற்றுமங் கேசிலை யதன்மேலே
பதியச் செயும்வகை பொற்புறுங் கூடலின்
ஒருதிப் பியநில யத்தின்வண் பாரினர்
பணிவிட் பதியினர் பெட்பொடுங் காணுற இரவோடே
படர்பொற் கரமலர் பற்றிமுன் பூணுற
அடல்பொற் பணிமுடி வெற்றிசெங் கோலொடு
படைபற் பலதரு தக்கநின் றண்மலர் பணிவேனே
நிதிபொற் கிரிதனை யெற்றுசெண் டாலடி
கொடுமுற் பெறுமொரு துட்டர்தங் காலனை
நெடிதுற் றெழுகடல் வற்றவென் றனைவிண் முகிலூர்வான்
நினைவற் றிடமுடி தத்திமுன் போய்விழ
வளைவிட் டெறியயில் கைக்கொளுஞ் சீலனை
நிலைமுத் தமிழொடு பெற்றவம் பாவிகை நினையாதென்

மதியிற் றிகழ்பரை துர்க்கைகங் காளியென்
வறுமைப் பகையற வெற்றிதந் தேழ்நிலன்
வசையற் றிடுதமி ழெற்கலந் தேதரு திருமாதா
மதியைத் தொடுபுரி சைத்தடங் கோபுர
மதுரைப் பதியின்மு ளைத்தநந் தாவொளி
மலயத் துவசன்வ ளர்த்தசிந் தாமணி உமையாளே.

(கு-ரை) நபம் - ஆகாயம். அங்கு - அம்மி மிதித்தல் செய்யுமவ்விடத்து. சிலை - அம்மிக்கல். இரவோடு - இரத்தலைச் செய்த பிரம கபாலம். அடிகொடு - அடி கொடுத்து என்னும் பொருட்டு; வரிப்புனை பந்து என்புழிப்போல. ஏழ்நிலன் - பாட்டு, நூல், வாய்மொழி, உரை, பிசி, அங்கதம், முதுசொல் என்பன.

அத்தன் பில முற்றிக்காணருபத மெனவும், அம்போருகன் நபமுற்றிக் காணரு முடி யெனவும் நிரனிறை கொள்க. ஐந்தானன், மணவினை முற்று மங்கு, சிலை மேல் பதியச் செயத்தன் காமலராற்பற்றிப் பூண அவற்குப் பல தரு நின்றாண் மலரென முடிக்க. செண்டாலடி கொடுத்து நிதிபெற்ற துட்டர் காலனென்க. (௩)

தனனத் தனதன தானத்த தந்தன
தனனத் தனதன தானத்த தந்தன
தனனத் தனதன தானத்த தந்தன தனதான.

அறிவிற் பெரியரென் மானித்த வண்டர்கள்
அருள்பெற் றுரைகவி யாலார்ப்ப வின்பெனும்
அழிவற் றிடுமுயர் தேன்வார்த்து நன்கலை நிறைதூய
அதிநுட் பமதியி னேசாக்க வின்றெளிர்
அலரிக் கிரிதலில் பேதார்த்த மொன்றிருள்
அகலக் கடிதுற லோடாத்தர் துன்பினை அறமோதி
மறியுற் றிடுகர னார்வாய்த்த சிந்தனை
மறைநத் துறுதட நீர்பூத்த வம்புய
மலர்நற் றிருவடி மால்வாய்த்த வெண்சிலை மனமீதும்
வருதற் கமர்குவன் யானேத்து மன்பிலன்
வளரத் தருசிசு வாய்சாற்ற வின்றியும்
வலிதிற் கருணைசெய் தாய்போற்ப ரிந்தருள் புரிவாயே

தறியிற் செறிபரன் வானோர்க்கு நன்றது
தராமுற் றிரிபுர நீறாய்க்க ரிந்தெரி
தாவுத் தரகிரி நாணார்த்து முன்றனு வெனமேவுந்

தளிரிற் றிகழ்கர மானேய்த்த வங்கணி
சயைபத் திரைசிவை தோல்போர்த்தி ரந்தலை
தனியற் கணிமுடி பார்சேர்த்த பொன்கலை தருதேவி

வறியற் கருள்செயு மாதாத்தி கம்பரி
வளர்முத் தமிழினை யானேற்ப முந்தருள்
மலைபெற் றிடுமொரு கார்போற் றிகழ்ந்தொளிர் குழலாளே

மலயத் துவசனை வாணாட்டி னின்றரன்
வருவித் திடவருள் கோமாட்டி வண்பொழின்
மதுரைப் பதியுறை மீனாட்சி யம்பிகை உமையாளே.

(கு-ரை) வண்டர் - வண்டு. அர் - சாரியை. மால்நீத்த அண்ட ரென வும் பிரிக்க. அண்டர் - அறிவாற்றேவருக் கொப்பாயவர். அலரி - சூரியன். நார் அன்பு. நத்து - சங்கு, நத்துதல். சிலை - கல், தறி - நடுதறி. உத்தரகிரி - மேருமலை. தனியன் - சிவன்.

பெரிய ரென்ற வண்டர்களார்ப்ப இன் பெணுந்தேன் வார்த்து அப்பெரி யாரது கலைநிறைந்த மதியின் எதிராகக் கவின்று அலரிக்கு இரிதலில்லாத அஞ்ஞான விருளகல அவர் மதியிற் கடிதுறலோடு துன்பினை மோதி, மறிக்க ரனது சிந்தனை யென்ற தடாக நீரிற் பூத்த அம்புயமல ரென்ற நின்னடி யெ னவும், மறை யென்ற சங்குகள் சூழ்ந்த தடாகம் எனவும் மறை விருப்புற்ற தடாக மெனவு முரைக்க. (௪)

தான தத்தன தான தத்ததன தான தத்ததன தானன
தான தத்தன தான தத்தன தான தத்தன தானன
தான தத்ததன தான தத்தன தான தத்தன தானன தனதானா.

ஆதி முத்தரிட மாமு டற்பகுதி
நீயி ருத்தலின்மு ளனினில்
ஆகு லச்சமனை மாணி டக்கழலி
னாலு தைத்துயிரை மோதினர்
ஆய டிப்பெருமை தானு முற்றறிவ
ராக விற்றெரிகு வாரவர் அறிவாரோ

ஸ்ரீ மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

ஆழ முற்றகிணை றேய்சி றுத்தவளை
 பார்கி ணற்றனவெ ளீர்மையின்
ஆசை பற்றியுணர் பேயர் சித்தர்முனி
 வோரு மப்பெருமை யோர்தலின்
ஆயு முத்தியினு மூவ கைக்குளொரு
 தேக சித்திகொடு தூயநின் அடிபேணி

ஓது தெற்கிறைவ ராம லூற்றிடுவ
 ரூழி பற்பலவு மீதுமெய்
யோகி னப்பதும பாதம் வைத்துமன
 மேம னைத்தெறுத லோர்கிலர்
ஊக தத்துவக லாச முத்திரம
 தாடி வற்கலையொ டார்சடை உடையோராய்

ஊர்கள் பற்பலவு நீர்கள் பற்பலவு
 மோடி யுற்றுமெவன் மாய்குவர்
ஓரி னெத்தனைசெய் தாலு மத்தனையு
 நீரெ ழுத்தனைய நீர்மைய
ஓகை யுற்றுநின தாணி னைத்தெருமை
 யூர்தி கெட்டொழிய வாழ்தலை அருள்வாயே

வீதி யொற்றைவழி யோடி ரட்டையுருள்
 வேறு மப்பினுறு மாவியின்
வேக முற்றவுருள் வான்மி னுய்த்துநிறை
 சார முற்றவுரு ளாதியும்
வேறு பற்பலசு வாதி யுய்ப்பனவும்
 வாயு விற்கடிய வேகமொ டொருவாதே

மேவ விற்பகலின் வீணை யுற்றவிசை
 யாதி முத்தமிழி னூர்கவி
வேறு பற்பல்வங்க நாத மத்தனையு
 மாதி யிற்பரிசின் மேவுற
மீள வுய்க்குமொலி கால்வ வுய்க்குமிசை
 மாடி யிற்செவிப டாமையின் திதிவேலை

மீது நெய்த்திரிக ளாதி யற்றவொளி
சூரி யற்குநிக ராயுற
மேவி மக்கள்பலர் காதி னுய்த்துமகிழ்
போதி ருப்பினியல் வார்குழல்
வீழு மப்புகொடு போது மைக்குழலி
னாரு மொய்த்துமகிழ் கூடலின் ஒளிர்கோயில்

வேத வித்தகரு மாதி முத்தமிழை
யாயும் விற்பனரு மோர்புடை
வேய்நி கர்த்தபுய மாதர் மக்களொடு
கூடி நிற்பவர்க ளோர்புடை
மேவ நித்தமும்வி ழாவொ டுற்றுவளர்
தேவி சிற்பரைபு ராதனி உமையாளே.

(கு-ரை.) ஆதிமுத்தர் - சிவன். இடமாம் உடற்பகுதி - இடப்பாகம். ஆயடி- அவ்வடி. அவர் - அச்சிவன். மூவகைச்சித்தி - உருவசித்தி, அருவசித்தி, ரூபாரூபசித்தி. தெற்கிறை - இயமன். யோகின் - யோகத்தினால்.

ஒற்றைவழி யோடுகின்ற இரட்டையுருள் - பைசைகிள் (Bicycle). அப்பின் ஆவியின் வேகமுற்ற உருள் - நீராவியாலோடுகின்ற வண்டிகள். (Steam locomotives) மின்சார முற்றவுருள்-மின்சார வண்டிகள். (Electric Tramways) ஒலிகால்வ - முன்வாங்கிய ஒலியை ஆதியிற் போல மீள மீளக் காலுகின்ற யந்திரம். அது கிராம்போன் முதலியன. (Gramaphone) நெய்த்திரிகளாதியற்றவொளி - எலெக்டரி விளக்கு முதலியன. (Electric light etc.) இருப்பின் இயல்வார் குழல்-இரும்பாற்செய்த நீண்ட குழாய்கள்(Iron pipes.)

ஆதி முத்தர் மோதினர்: அவர் முற்றறிவராதலின், தெரிகுவார். பேயர் அறிவாரோ; சித்தர் முனிவோரும் ஓர்தலின் ஊழி பற்பலவும் உற்றிடுவர். ஈதுமெய். பாதம் மனம் வைத்துத்தெறுதல் ஓர்கிலர். ஆடி ஓடி யுற்றும் எவன் மாய்குவர். அவர் எத்தனை செய்தாலும் அத்தனையும் நீரெழுத்தனைய. நின்றருள் நினைத்து வாழ்தலை யருள்வாயென முடிக்க.

இரட்டையுருள் முதலாயின மேவலின் இசை பகலிற் செவிபடாமையின் சிலவேளை மக்கள் காதினுய்த்து மகிழ்போது மைக்குழலினாரு மகிழ் கூடலென்க. (௫)

தனத்தன தத்த தானன தனத்தன தத்த தானன
தனத்தன தத்த தானன தனதானா.

அகத்திரு ளற்ற ஞானிகள் அடுத்திடு முத்தி தானுமென்
அயற்படு சுட்ட லேதுமில் அதனாலே
அடித்தளிர் சித்த மேவிடின் அனைத்துடல் பற்ற நேரினும்
அதற்கிணை மற்றின் மாணடி அருள்வாயே
பகற்பொழு துற்ற தாரகை யெனப்புவி சுற்று சூரியர்
பதக்குறை யொற்றை யாழியொ டொளிராதே
பசித்தவர் கற்ற நூலென உறத்திகழ் பொற்பி னீள்கழல்
பரித்திடு மற்பி னால்கவி பகர்வேனே
மகத்தழல் பற்று தூமம்விண் மறைத்திருள் பற்ற வூடல்கொள்
மனத்தியர் பிய்த்து வீசிய பணிமேவு
மணித்தர ளத்தி னோடுதிர் உடுப்பக லொத்து வீதியின்
வழித்தலை முற்று நாடொறும் ஒளிர்கூடல்
நகர்ப்பதி பெற்ற கோமகள் நமக்கிறை வெற்றி வேலனை
நலத்தொடு பெற்று நானிலம் அரசாள
நவிற்றிமுன் விட்ட நாரணி வனத்துறு துர்க்கை மாதரி
நடித்தருள் பார்க்க நாயகி உமையாளே.

(கு - ரை.) பதக்குறை - அருணன். மற்றுஇல் - அதற்கு முத்தியுமிணையில்லை. நால்கவி - ஆசுமுதலாய நாற்கவிகள். பகல் - சூரியன்.

சூரியர் பதக்குறை யொடு ஆழியொடு தாரகையென நூலென ஒளிராதே யுறத்திகழ்கின்ற கழல் பரித்திடுமன்பினால் நாற்கவி பகர்வே னென்க.

தூமமறைத்தலால் விண் இருள்பற்றப் பணிமேவிய மணியுந்தரளமும் உதிர்ந்த உடுவையும் பகலையும் ஒத்து ஒளிர்கின்ற கூடலென்க. (௬)

தனதந்தன தனதந்தன தனதந்தன தனதந்தன
தனதந்தன தனதந்தன தனதந்தன தனதந்தன
தனதந்தன தனதந்தன தனதந்தன தனதந்தன தனதானா.

விழியம்புய மலர்கொண்டொரு
பதபங்கய மிடுவிண்டுமண்
மிசைகண்டில னென்னவன்பர்கண்
மொழிகின்றன ரிதுவெண்கொ ளுன்
மிளிர்பங்கய வடிசங்கர
னிடநின்றது தெரிகின்றிலன் மலர்மேல்வாழ்

விதிமுன்பெழு மிகல்கொண்டிரு
பதமுந்தொட வொருபன்றியின்
வினைமுன்கொடு புவிகிண்டின
னதுகொண்டவ னடிகண்டிலன்
விதியிந்திரன் முதலண்டரு
ளெவர்கண்டவ ருடலொன்றிய அரனேவுங்

விழிகொண்டுன தியல்கண்டன
னதுகொண்டவன் வலமொன்றிய
விழிகண்டது சொலலுண்டுகொ
லுனையன்றியொர் செயலின்றென
மிகவன்பொடு மறையந்தமு
ம்றகின்றன பலவிண்டுன அடிகாணா

விழைகின்றன னடியன்செயன்
முடவன்கிளை யுறுமொண்கனி
விழைகின்றது நிகரன்றியென்
மொழிகின்றது னருள்கொண்டுபல்
வினையுங்கெட நினதொண்புகழ்
நினைவன்பணி புரிவன்கவி புனைவேனே

வழிகின்றநன் மதுவுண்டிசை
பகர்வண்டுக ளுயர்வண்டரு
வளர்தண்டலை யயனின்றரி
கதிர்கொண்டுசெல் பவர்தங்களை
வழிகண்டிட லரிதென்றவர்
மருளும்படி விழுதண்பணை வயல்சூழும்

வளர்செந்தமிழ் குடிகொண்டுறு
செழியன்பதி தனில்வந்துநன்
மலர்மங்கையர் சயமங்கைபொ
டுலகெங்கணு முறவென்றிசை
மருவுந்தனி யரசொன்றிய
மதியின்குலம் வளரங்கயல் விழியாளே

வழிகண்டுனே யடைகின்றவர்
பலர்நின்ருெரு புடைகும்பிட
மயலொன்றெனே நிகர்கின்றவர்
பலர்வந்தொரு புடைநின்றிட
மயல்கொன்றுரு வுருவொன்றரு
வருவொன்றிய தவர்கண்டிட — வரையாதே

வரைகொன்றிடு சசிகொண்கன்மு
னிறவுந்தளி யிடனின்றுபல்
வரமுந்தரு தருமந்திகழ்
வடிவங்கொளு மலேநந்தனி
மதுரந்தழை தமிழ்தங்கெனே
நினையும்படி யருளம்பிகை — உமையாளே.

(கு - ரை.) விண்டு - திருமால். விதி - பிரமன். அவனீ - சங்கரன். உருவொன்றரு - ரூபாரூபசித்தி.

சங்கரனது ஒருபதங் கண்டு அப்பதத்திற்குத் தன் விழியையளித்தவிண்டு அதனேக்கண்டிலனென அன்பர் மொழிகின்றனர். இதுவென்கொல்? அடிமுடி தேடியகாலத்து அவ்விண்டு நின்னடி அச்சங்கரனிடப் பாகத்து நின்றதுதெரியாது அவன் இருபதமுந்தொட நினேந்து புவிகிண்டினன், அதனுலே யாவருங் காணற்கரிய நின்னடியே யன்றி முன்கண்ட அவ்வலப்பாதமுங்கண்டிலனென்க.

உனேயன்றியொர் செயலின்றென மறையறைகின்றவாதலின் அச்சங்கரனது வலமொன்றிய விழிக்குச் செயலில்லே. அதனுல்-அரனும் உன்விழியாகிய தன் இடப்பாகத்துவிழிகொண்டே நின்னியல் கண்டனனென்க.

வண்டுகள் அவர்மருளும்படி அவர்மேல் விழுதண்பணே யென்க. மயலேக்கொன்று உருவசித்தி ரூபாரூபசித்தி அருவசித்தி இவற்றுளொன்று பொருந்திய தவர்களென்க. (எ)

தனதந்த தந்த தனதான
தனதந்த தந்த தனதான
தனதந்த தந்த தனதான — தனதானு.

அணுவொன்று கொண்டு புவிகோடி
அளவின்று தந்த தொருபாதம்
அவைபொன்றி முந்தொ ரணுவாக — உறுமோர்தாள்

அருவன்று கண்கொ ளுருவோவில்
அதுதொண்டர் கண்டு மறியாத
அருளென்று பண்டை மறைகூறும் அடியேனை

கனுவொன்று பொங்கர் மரனேர்வல்
கருமங்கள் வென்று னிருபாத
கமலங்க ளென்று புகுவேனுன் அருளாலே

கதியொன்றி னன்றி யுயலேது
கதிரன்றி யொன்றும் விளையாது
கழலொன்று துங்க வொளிவீச வருவாயே

இணையின்றி யென்று மழியாத
இயல்கொண்ட மைந்த தமிழ்மாதின்
எழினின்ற சங்க முறுகூடல் வளர்தேவி

இறைவன்சொல் கொண்டு வளர்காழி
எழுமைந்த னுண்டு தமிழ்பாட
இருகொங்கை நின்று வழிபாலே அருண்மாதா

அணையங்க தம்புள் பரியாக
அடைசெங்கண் விண்டு னுருமேவ
அருண்மங்கை யெங்கள் கவுமாரி அமலேசன்

அடல்கொண்டு வென்ற நினதாணை
யதுகொண்டு நின்பி னுறுபூசை
அமுதுண்டி லங்க வரசீயும் உமையாளே.

(கு-ரை.) அளவின்று - அளவில்லாமல். அது - அத்திருவடி. கதிர் - சூரியன். மைந்தன் - திருஞானசம்பந்தர். அணை - சயனம். அங்கதம் - பாம்பு. புள் - கருடன். உன்உரு - உனது பெண்வடிவம்.

அன்று, இல்லை, அருளென்பவற்றைப் பாதம் தாள் இவற்றோடு தனித் தனி கூட்டுக.

என்கண் நின்கழல் காணு மியல்பிற் றன்மையின் கனுவாகிய கண்ணிருந்தும் காணுமியல்பில்லாத மரத்தை நேர்வனென்க. கதிரன்றி எப்பொருளும் விளையாமை போல உன்னையன்றி யுய்த லெவ்வாற்றானுமில்லை யாதலின் நீயே அருள்செய்ய வருவாயென்க.

அட்டதிக்கையுந் தன்படையையும் வென்ற நின்னுடைய ஆணைகொண்டு நினக்குப்பின் பூசையமுதுண்டு விளங்கும்படி அமலேசனுக்கு அரசளித்த உமையே யென்க. (அ)

௯௨. மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

தந்ததான தானதான தந்ததான தந்தன
தந்ததான தானதான தந்ததான தந்தன
தந்ததான தானதான தந்ததான தந்தன தனதானா.

அங்கமாறெ னாறுகாலொ டன்புசீல மென்சிறை
கொண்டுமோன கானில்வாழு மந்தண்ஞான வண்டர்கள்
அந்தியாக ரோடுநீடு மன்றிலாடு முன்புகழ் நனியாடி

அந்தமேயி லாதபோத வின்பமாத வந்தனை
உண்டுகாத லோடுமோகை யின்றியேய மர்ந்திட
ஐந்தொடாறெ னாலுகோண நின்றபாத பங்கய மலர்பாச

பங்கமேவி யேமனாக மஞ்சியாழு மண்டுகம்
என்றுநாயி னேனையோவ வின்றுதேனு முண்குவல்
பங்கின்மேவு நாதரேவ வன்கலாமொர் குஞ்சர வழி வூணார்

பண்புமேயி லாதுமாறன் முன்புவேழ மென்றிரை
தின்றதாலெ னாவுனாது துங்ககோபு ரந்திகழ்
பங்கமேயி லாதகோயில் வந்துவாயி னின்றடி தொழுவேனே

துங்கநாலொ ருமனாய மைந்தனாயு மென்றுனை
கண்டகீர னாதியாய சங்கமேய வன்புறு
தொண்டர்தேற வோதுகாள கண்டர்தேவி யம்புவி தருமாதா

தும்பிசீய வூர்திமேலொ ருங்குமேவ வுன்சிறு
மைந்தனாமெ னாதுதாதை கந்தனோடு சென்றெதிர்
தும்பைசூடு வாருயாது பொன்றவாள்கொ ளந்தரி சுரர்போல

எங்குமேவ வானவூர்தி யுந்துசீனர் சிங்களர்
அங்கிலேய ராதியோர்வி ரைந்துபோது மங்குயர்
இஞ்சிசூழ மாடகோபு ரங்கண்மோத வங்கவை கடவாதே

எந்திராதி யோடுவானி றங்கிமாட நின்றிவண்
வந்தொருசி னூறுகாண மென்றுவாணி கஞ்செய
எண்கொளாத வாரமீயு மெங்கள்கூடல் வந்துறை உமையாளே.

(கு-ரை.) அங்கம் ஆறு - ஆசன முதற் சமாதி யீறுவுள்ள, ஆறுயோகாங்கங்கள். சீலம் - தவவொழுக்கங்கள். வண்டர் - வண்டு. அர் - சரியை. ஆண்ட ரெனவு முரைக்க. மாதவம் - தேன்.

ஐந்தொடு ஆறு எண்ணுனு கோணம் - [redacted]ம் [redacted]குங்கூடி யதாகிய நாற்பத்து முக்கோணம்.

பாச பங்கம் - பாசமாகிய சேறு.
ஏமநாகம் - இயமனாகிய பாம்பு.
வன்கல்லாமோர் குஞ்சரவடிவு - மதுரைக் கோயிலு ள்ள கல்யானை.
ஊமன் — உருத்திர சன்மன்.
தும்பி - யானைமுகக் கடவுள்
காணம் - பொன்.
ஆரம் - முத்து.

ஞானிகளாகிய வண்டுகள் பாடியுண்டு அமர்ந்திட நின்ற நின் பாதபங்கய மலரென்க.

குஞ்சரவடிவு, ஊணுர் பண்பு மில்லாது வேழத்தை மென்று தின்றதால் நாயேன் மண்டுக மாயினு மூணுர் பண்புடைமையின் தேனு முண்குவ லென்று கருதி வந்து நின்று தொழுவேன். அதனுல் நின்பாத பங்கயமலர் என்னைமண் டுகமென்று கருதி நீங்குதவில்லை யெண வுரைக்க.

களவிலுரைகண்ட கீரனுதியாய தொண்டர் தேற அவ்வுரையை ஊமனுயு மென்றேறிய காளகண்ட ரென்க.

சீயவூர்தி மேல் தும்பியு மேவக்கந்தனேடு சென்று வாள் கொண்டஅந்தரி என்க.

சுரர்போல ஆகாயத்தில் வானவூர்தியைச் செலுத்திச் செல்லுகின்ற சீன ராதியோர் இஞ்சி சூழுமாட கோபுரங்கள் மோதுதலால் அவற்றைக் கடந்து செல்ல முடியாமல் மாடத்தின் வழியாக வானத்தினின்றிறங்கி ஒருசிநூறு பொன்னென்று அளவுகடந்த ஊதியங்கூறி வாணிகஞ் செய்யச் செல்வப் பெருக்கால் அவர்களிடத்து ஊசி போன்ற சிறு பொருளுக்கும் மதிப்பிலடங் காதவிலை பெற்ற முத்துக்களைக் கொடுக்குங் கூடலென்க.

இது தென்னுடு முத்துடைத்து என்பவாகலின் அதன் மிகுதியையும் தற் காலம் பிறதேசத்தார் ஆகாய விமானம் தூமசகட முதலாய யந்திரங்களாலும் ஊசிமுதலாய கைத்தொழிற்பொருளாலும் நமது தேசத்திருந்து பெரும் பொரு ள்பெற்றுச் செல்லுதலையும் குறிக்கின்றது. (கூ)

தனனு தனன தனனதனத் தனன தனன தனனதன
தனனு தனன தனனதனத் தனன தனன தனனதன
தனனு தனன தனனதனத் தனன தனன தனனதன தனதானு.

திருவே வருக வருகமறைத் தெரிவை வருக மறையினெளிர்
சிரமே வருக வருகவறத் திரையி லெழுந லமிர்தமுறு
தெளிவே வருக வெமதுகுலச் சிறுமி வருக வருகெனநின்
அன்னையோடே

 மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

திருவார் மலய முறுகொடிநற் செழியன் மொழிய மறையின்முடி
சிவனு ருளமு மடியார்மனத் தெருள்கொண் மலரு மலர்கயிலை
திகழ்கோ யிலுமவ் வடமலையிற் செறியு மிடனு மொருவகையின்
ஒருவாதே.

குருகார் கரமொய் சிறியமனைக் கொடுசெய் புதிய மனையினறை
குமையா விரைவி னொருவிமினற் கொடியி னணுகி மணியினியல்
குரைநூ புரமொ டணைமடிபொற் குயமு மிறைவ னுரமுதுகும்
முடியோடே.

குதியா டியநின் னடிமலரிற் குழவி னினிய தமிழின்மொழி
கொடுசொர் பொருளொ டிசைநலமுட் குடிகொள் கவிநன் மலரிடவை
குறுமோர் பெரிய திருவரமெக் குறைசெய் திடினு மருள்கபிற
குறியேனே.

குருவே வருக பிரணவமுற் குதலை மொழியி னறவுரைசெய்
குகனே வருக வருகபகைக் குடரினிலகு மயிலுடைய
குமரா வருக வருகவெனக் கொடுவின் மலைகொள் கரனுரைசெய்
மயிலூர்வேள்.

குயிலே வருக வெனதுயிரிற் குலவி யொளிகொள் கொடிவருக
குணமே வருக வருகவெனக் குழுமு குறமின் மகளுமெழு
குயிலூர் திருவன் மகளுமுறக் குறுகி நினது கழல்பணிய
அவர்மூவர்.

உருவோ ருருவி னுறமடிவைத் தரமு முதுகும் வருடியென
துழைநீர் வருக வெனமகிழ்வெற் புதவு மமல முதல்வியெம்
துயிரே யுயிரி னுறுமுணர்விற் கொளிசெ யுணர்வின் வடிவமுறும்
ஒருதாயே.

உறவே விறகு சுமைகொடுபுக் குலகின் மறுகி விலைபகரும்
ஒருபா ணடிமை யரசொடுமற் றுயர்வு மடைய முடியுதவும்
ஒருகோ மகள்விண் மதிகுலமுற் றொளிரு மதுரை நகரரசி
உமையாளே.

(கு-ரை) திரை - கடல். ஆகுபெயர். அன்னை - காஞ்சனமாலை. மலயமுறு கொடிச் செழியன் - மலயத்துவச பாண்டியன். வடமலை - மேருமலை குருகு - வளையல். சிறியமனை - சிற்றில். குமையா - குமைத்து, அழித்து இறைவன் - மலயத்துவசன். குயிலூர்திருவன் - இந்திரன. இந்திரன்மகள் தெய்வயானை. வெற்பு - மலையரசன். பாண் - பாணபத்திரன்.

செழியன் கின்னன்னையோடு வருகவெனமொழிய மறைமுடி முதலாய வற்றை ஒருவகையினொருவாமல், சிற்றிலின் அறையையழித்து அதனையொருவி மின்னற்கொடிபோல அணுகி மணிநூபுரமொடு அன்னைமடிமுதலாயவற்றிற்குதியாடியநின் அடிமலரென்க.

மலைகொள் கரன் வருகவென உரைசெய் வேள் வருகென இருமகளிரு முற அம்மூவருங் குறுகிப்பணிய அவர்களை வருகென அழைத்து மடிவைத்து வருடி மகிழுமுதல்வியே யென்க. (௧0)

தனத்தன தந்த தனத்த தந்தந் தனதந்தந்
தனத்தன தந்த தனத்த தந்தந் தனதந்தந்
தனத்தன தந்த தனத்த தந்தந் தனதந்தந் தனதானு.

எருக்கலர் தும்பை கடுக்கை கஞ்சம் பிசுமந்தம்
இறைத்துவி ழுந்து துதித்து நின்றங் கிருசெங்கை
யிணைத்துநி மிர்ந்து குவித்து நெஞ்சங் கசிவொன்றும்
அடியார்வான்

இபத்தினை யெண்கண் முகத்தை வெண்சங் குடனைந்தும்
இசைத்திடு செங்கை யிணைத்த குஞ்செம் பொனையென்றும்
எடுத்தளி கஞ்ச வுருக்கொ ளுஞ்சுந் தரமொன்றும்
நிதியோடே

திருக்கிளர் சங்கம் வெறுக்கை வண்செந் தமிழின்பு
திளைத்திடு துங்க முதற்ப லங்கங் களையொன்று
சிறப்பொடு தங்க வளித்து நெஞ்சந் தனிலன்பில் கொடியாரே

தினக்கதிர் முன்பு புழுச்செல் பண்பொன் றிடநன்று
தினைத்துணை யின்றி விழச்செய் தெங்கும் புகழ்கொண்டு
செருக்குறு மென்ற னகத்து மொன்றுன் பதகஞ்சம்
மறவேனே

அருக்கனொ டிந்து வுடுக்க ணஞ்சென் றகனண்ட
அடுக்குமி கந்து தடுக்கு மொண்செங் கயல்கொண்ட
அடற்கொடி யொன்று துகிற்கண் முன்றங் குறமொன்றும்
அறியாதே

அடிக்கடி பொங்கர் மிசைத்த வழ்ந்திங் குறுமென்றில்
அடுத்தொளிர் செம்பொ னிழற்செய் வெண்பொன் கொடுதுன்றும்
அணிச்சிக ரப்பல் சுதைக்கு டங்கண் டவர்சிந்தை யருள்கூடல்

இருக்கொடு தொண்டர் தொடுத்த சந்தந் திகழ்பண்டை
இயற்றமி ழண்டர் நவிற்றி யென்றும் பணிகின்ற
எழிற்றளி நின்று கயற்க ணன்பின் கடல்பொங்க வளர்மாதா
எனைப்பணி கொண்டு நினைக்கு முன்சிந் தனையின்கண்
இருட்பட லங்கள் கெடப்பு குந்தென் கவிகொண்ட
இசைக்கருள் விந்தை தமிழ்க்கு முன்றொண் டுறுநங்கை
உமையாளே.

(கு - ரை) பிசுமந்தம் - வேம்பு. வான் இபம் - வெள்ளையானை. எண்கண் முகம் - எட்டுக்கண்ணையுடைய நான்கு முகங்கள். சங்குடன் ஐந்து - சங்குடன் சேர்த்தெண்ணியபஞ்சாயுதங்கள். கஞ்சவுருக்கொள்நிதி - பதுமநிதி. சங்கம் - சங்கநிதி. வெறுக்கை - பொன். தளி - கோயில். தமிழ்க்கு - தமிழ்க்கவி கேட்டு. தொண்டுறுநங்கை - மகளாகத்தொண்டு செய்த நங்கை. வான் இபம் - இந்திர பதத்தைக் குறிக்கின்றது. எண்கண்முகம் - வேதமுரைக்கின்ற நான்கு முகமுடைய பிரமபதத்தைக்குறிக்கின்றது. செங்கை - துட்டநிக்கிரகஞ் செய்யுங்கையினையுடைய திருமால் பதத்தைக்குறிக்கின்றது.

அடியார் வானிபத்தையும் முகத்தையும் கையையும் என்றும் பொன்னை யளிக்கின்ற கஞ்சவுருக்கொண்டநிதியையும் சங்கநிதியையும் வெறுக்கையையும் தமிழ் திளைத்திடு துங்க முதலாகிய அங்கங்களையும் பொருந்துகின்ற சிறப்பியல்போடு தங்கும்படி அவர்களை யளித்துக்கொடியார் ஒன்றிட்டுவிழச்செய்து புகழ்கொண்டு என்னகத்து மொன்றிய நின்பதமென்க. இதனால் அடியார் இந்திரபதம் பிரமபதம் திருமால் பதம் குபேரபத முதலாய சிறப்புப் பெற்று வாழ்தலும் கொடியார் அழிதலுங் கூறியது காண்க.

இல்லை யடுத்தொளிர்கின்ற செம்பொன் கொடுதுன்றுஞ் சிகரத்தையும் சுதைக்குடத்தையுங் கண்டவர் அருக்கனும் இந்துவும் உடுக்கணங்களும் நயல் கொண்ட கொடித்துகில் கண்முன் தொங்குதலால் ஆகாய வழியொன்று மறியாமல் தவழ்ந்து இங்குறுமென்று மருளுகின்ற கூடலென்க. இதனால் அருக்கன் பொற்சிகரத்துக்கும் இந்து வெண் பொற்சிகரத்துக்கும் உடுக்கணஞ் சுதைக்குடத்துக்கும் உவமமாதல் காண்க. (கக)

தானன தந்தா தனதன தனனா தனனா தந்ததனா
தானன தந்தா தனதன தனனா தனனா தந்ததன
தானன தந்தா தனதன தனனா தனனா தந்ததன தனதானா.

தோகைகள் பைங்கா னடமிடு தொழின்மே விடவா னின்றுகிளி
சூழ்தமிழ் முன்பா டிடவெழு சுரமே யறுகால் வண்டரிஞ்ச
சோழனை வென்றா னகர்வளர் துகடீ ரருளா னந்தனுறூ
தொழின்மேலோர்

தோள்வலி கொண்டா ரிரவலர் துயர்தீர் கொடையா ரன்பொடி
சூழ்நெறி நின்று ரெமர்குல சுகவா ரிதிநீர் பொங்குமதி [சை
தோய்குரு முன்போர் குறுகிய சுவரே பரியா வுந்தியொரு
துரைகாண

ஓகையின் வந்தோ னகர்பல வுறைவார் விழைவா லந்தருவி
ஞேடொளி ரைந்தா ரிடனம ருரவோ னணிமா முன்பகரும்
யோகுறு மெண்பே றுறுதவ ஞெருவா தறிவால் வந்தணைசெய்
நினதாள்கள்

ஊழ்வலி வென்றோ ருணர்குவ ருணரே னுரைதா னென்புகல்வன்
ஊனுடல் கொண்டோ பணிகுவ துருவோ வருவோ நின்கழல்கள்
ஊகமொ டெண்சேர் கலைகொடு முணர்சால் பிலவே யென்புரிவ
தருள்வாயே

ஈகையி னின்று ரிரவல ரிவண்மே வுகரா மென்பொருளும்
ஈகுவ மென்றே பலர்நட விரவால் வருவா ரின்றிமனை
யேழ்நிலை சென்றே மெலிகொடி யிமையோர் பதியோ டொன்றி
யவண் உறுவோரும்

ஏழ்பவம் வென்றார் முனிவரு மிரவா மையினுன் முன்பலிகொள்
ஈசனை யின்றே யுடல்பொரு ளெழிலாருயிரே யென்பலவும்
ஈகுவ மென்றே யவனுல கிறுவாய் தடவா நின்றகவும் உயர்கூடல்

வாகைகொண் மொய்ம்பா ருறைதிரு மதுரா புரியா ளம்பிகையென்
வாய்வரு மன்பார் கவியுநின் வளமார் பதமே கொண்டபரை
மாதரி யெண்டோண் மதுபதி மயிடா சுரனுள் பொன்றமிதி மகமாயி

வாளொடு நின்றாய் பகவதி வனயோ கினியே சுந்தரிமின்
மாலினி வன்பார் முழுதுமுண் வசுசே யிளையா யந்தரிவிண்
மாலுறு பண்பார் கயல்விழி மல்யா சலமா தங்கிசிவை உமையாளே.

(கு - ரை) தோகை - மயில். கான் - சோலை. எண்பேறு - அட்டசித்திகள். வாரிதி - கடல். மதி - சந்திரன், அறிவு.

தோகை மேவிடக்கிளிபாடிடவண்டு எழுசுரமிசைக்கின்ற நகரென்க.

மேலோரும் கொண்டாரும் கொடையாரும் நின்றருமாகிய எமர் குல வாரிதி என்க.

கஅ மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை

எமர் குலவாரிதி நீர் பொங்குகின்ற மதியாகிய எம்மைத்தோய்கின்ற குரு வெனவும் பொங்குகின்ற மதிதோய்ந்த குருவெனவுமுரைக்க.

மதியுங் குருவும் வந்தோனும் உரவோனும் தவனுமாகிய நகர்வளர் அரு ளானந்தன் அறிவால் வந்தனை செய் நின்றுளென்க.

சுவரேபரியா உந்திவந்தேன் என்றது, ஒருதுருக்கவரசன் முன்பு இடிசுவ ரே குதிரையாகுமாறுசெய்து அதன்மேலூர்ந்து சோழவந்தானூரை வலம் வந்த செய்தி குறிக்கின்றது. சோழனைவென்று னூரென்பது இக்காலத்துச் சோழவந்தானென மரீஇயது.

ஐந்துருவினோடு ஐந்தூர் அமர்வோனென்றது வைகாசித் திங்கள் பூர நாளில் யாம் சமாதி புகுவே மென்றபோது சோழவந்தானூர், கிண்ணிமங்கலம், சின்னமனூர், பெரியகுளம், மதுரை யென இவ்வைந்தூரிலுமிருந்து அங்கு வந்திருந்த அடியர்கள் தந்தம் ஊரில் சமாதிபுகவேண்டுமென்று வேண்ட அவ் வாறே ஐந்துவடிவங்கொண்டு அந்நாளில் அவ்வைந்தூரினும் இற்றைக்கு நூற் றைம்பது வருடத்தின்முன் சமாதிபுகுந்த செய்தி குறிக்கின்றது.

சமாதி புகுந்த காலத்து அவ்வைந்தூர்ச் சமாதிக்கும் துருக்கவரசப்பிரதா னிகளால் மானியங்கள் விடப்பட்டன. அம்மானியங்கள் மதுரை யொழிந்த மற்றைய ஊர்களில் இன்னும் அழியாது நடைபெறுகின்றன. மதுரைமா னியம் அங்குள்ள மடத்தோடு சிறிது காலத்தின்முன் ஒருவனாலபகரிக்கப்பட் டழிந்தது. ஈகையினின்றுர் நாம் ஈகுவம் இரவலர் மேவுக என்று கொடி நட ஒரு வரும் இரவாமையினால் எழ் நிலைமாடத்தின் மேற்சென்று மெலிகின்ற அக் கொடிகள் இமையோர்பதி சென்று அங்குள்ளாரு மிரவாமையினால் சிவலோகம் வரைசென்று முன்பலிகொண்ட ஈசனை உடல்பொருள் ஆவி மூன்றும் தரு வோமென்று அழைக்கின்ற கூடலென்க.

மகமாயி - மரூஉ வழக்கு (கஉ)

தனன தந்தன தனன தந்தன தந்தன
தனன தந்தன தனன தந்தன தந்தன
தனன தந்தன தனன தந்தன தந்தன தனதான.

எளிய நின்றனை யடிமை கொண்டது மூண்டுகொல்
இறைவி யொண்கழன் மலர்பெ ருந்தவ மின்றிநின்
இதய பங்கய முறலு முண்டுகொ லென்றருள் உருவானோர்
இதுபு கன்றடி யியல்பு கண்டுரை யென்றிடின்
எனதெ னுஞ்செயல் புவன மெங்கணு மென்றுமில்
எதுவு நின்செயல் பணிசெய் தொண்டுகொ ளன்றுமுன் இயல்கானேன்

அளிகொ ளின்றுமு னியல்பு கண்டில னன்பிலன்
அமலர் தங்குழு முனமெ வன்புகல் வன்புயல்
அறமில் வண்டர்கள் செறுவி னும்பெய லுண்டுனை தருள்வேலை

அணைய வொண்கழ லெனது ளம்புகி னுந்தரும்
அறித லின்றியு மாசன் மன்பதை யின்றுய
ரதுக ளைந்திடு மெனையு மின்புற வந்தருள் புரிவாயே

வளியொ டங்கிம ணுதகம் விண்சுடர் திங்களும்
மலமு றும்பல வுயிரு மெண்படி வங்கொளும்
மதியின் வந்திடு குலம்வி ளங்கிய சங்கரி மலைமேலை

வளரு நஞ்சிவ குமரன் முன்கட லுண்டவன்
வழிப டுங்குரு பரனை யைங்கர மைந்தனை
மனிதர் விண்படர் சுரரொ டின்புற முன்றரு மொருதேவி

களிசெய் தெங்கின மதுவை யுண்டயல் விண்படர்
கழையை மென்றுளி நரிகள் கண்டும ருண்டடர்
கமுகி டம்புக் விழுகு ரங்குதெ ருண்டிட மலர்வாவி

கரைவி ளங்கன முதகம் வெண்சிறை மொண்டுபெய்
கழனி வண்பொழின் மதுரை யம்பதி தங்கிய
கடவுள் பங்குறு மமுத வஞ்சிசு வுந்தரி உமையாளே.

(கு-ரை) எளிய - விளி. அருளுருவானோர் - ஞானிகளுந் தேவரும். அமலரென்றது - மேற்சொல்லிய அருளுருவானோரை. புயல் பெயல் உவமம் கழலுளம் புகல் பொருள்.

அரசன் துயர்களைதல் உவமம். நீயருள்புரிதல் பொருள்.

நரிகள் கண்டு மருண்டு கமுகிடம் புகும்படி மதுவுண்டு விழுகுரங்குகள் தெருண்டிட அன்னங்களுதகத்தைச் சிறைமொண்டுபெய் கழனி யென்க.(கஉ)

தனன தந்தந் தனன தந்தந் தனன தந்தந்
தனன தந்தந் தானந்தந்
தனன தந்தந் தனன தந்தந் தனன தந்தந்
தனன தந்தந் தானந்தந்
தனன தந்தந் தனன தந்தந் தனன தந்தந்
தனன தந்தந் தானந்தந் தனதானா.

கடல்கடந்துந் தரைநடந்துங் குறைநவின்றுங்
கலைபயின்றுங் காணின்றுங்
கனைதுறந்தும் புவிபுரந்துங் கதியறைந்தும்
பிறபுரிந்துங் காய்துன்பங்
கதுவிமூழ்ந்தும் பசியினைந்துண் பதுபுரிந்தங்
குடனுறங்கும் காயங்கொண் டுறுமாசை

கழல்வதென்றும் பருமயங்கும் பருவமொன்றும்
படிவநஞ்சங் காலுண்கண்
கரவுறும்பெண் கலைவிரும்புங் கசடொழிந்தந்
தகனெனுந்திண் காலன்றன்
கயிறரிந்தொண் டவமுயன்றுன் கழனினைந்தின்
புறுவதென்றுன் காணங்கொண் டுறுசோதி

படர்சிலம்பின் பதநடங்கண் டடைவதென்றுன்
பணிபுரிந்தென் பாசம்பண்
படுவதென்றுன் பெரியதொண்டின் கடையனென்றுன்
புகழ்விழைந்துன் பாணின்றுண்
பதுமொழிந்தென் கருமபந்தங் கெடவனந்தங்
கவிபுகன்றுன் பாதங்கொண் டமர்நானே

பலகொடுந்துன் பதுபுரிந்துங் குழவிவெம்பும்
படிவிடும்பெண் பாலின்றென்
பலபகர்ந்தென் செயலதின்றுன் றனையொழிந்திங்
குயலுமின்றென் பாலன்பின்
படர்வதுன்றன் செயலிறந்தும் பரிவுறுந்தின்
பதமுமென்றுன் பாமண்பொன் றருள்வாயே

புடவியின்பஞ் சுடையுமின்றம் பரம்வனைந்தும்
பலியிரந்தும் பேய்நஞ்சம்
புதிதயின்றுந் தபுதலின்றித் தனம்வில்வன்றொண்
டதுபுரிந்தும் பூதந்தன்
புடைநெருங்குஞ் சுடலைசென்றெங் கணுமுழன்றும்
பொடியொடங்கம் பூணும்பண் பொடுதூய

புலமருண்டந் தணர்தொழும்பென் றிழிவறைந்தங்
கவர்வெகுண்டென் போமென்றம்
புவியினின்றங் கிகழவும்பின் பவர்விரும்புங்
கணிகைமுன்பும் போய்வந்தம்
புயவில்கொண்டன் றொருவனுந்தும் படியெதிர்ந்துந்
தினவிழந்துண் போரெங்கென் றொருவேடர்

தடிகண்மென்றுண் டமிழ்தல்கண்டுண் டடியுமுண்டங்
கமைதலின்றஞ் சாதன்பன்
தனையனங்கந் தனையுமுண்டும் பசியுழந்தங்
குதிர்வுதின்றந் தார்மைந்தன்
தமிழ்நிலங்கொண் டவனுடைந்தங் கெழுசலங்கண்
டைழுமினென்றுந் தாநின்றங் கடிசூரல்

சருவவின்றைந் தொழிலினுந்தன் பயனதின்றும்
திரிபுரம்பன் றுன்வந்துன்
சனகனெண்பொன் கிரியும்வெண்பொன் கிரியுமுன்கொண்
டினிதுறைந்தொண் டார்மண்பொன்
சகலமுங்கொண் டறமுனஞ்செந் தமிழ்நிலந்தந்
தெழில்பொருந்துந் தாயன்பொன் றுமையாளே.

(கு - ரை.) அம்பரம் - ஆகாயம். வளைதல் - ஆடையாகச்சுற்றுதல். பஞ்சு உடையும் இன்று - பஞ்சு ஆடையும் இன்றி. நஞ்சம் புதிது - கடலிற் றோன்றிய புதிதாகிய ஆலகால விஷம். தபுதல் - இறத்தல். இந்தனம் வில்வன் றொண்டு - பாணபத்திரனுக்காக விறகைவிற்ற வலியதொண்டு. பொடி-சுடலைச் சாம்பல். அங்கம் - எலும்பு. அந்தணர் - சுந்தரமூர்த்தி நாயனார். கணிகை - பரவையார். ஒருவன் - அர்ச்சுனன். வேடர் - கண்ணப்பநாயனார். தடி - பன்றியூன். அடியுமுண்டு - கண்ணப்பநாயனாரது செருப்புக்காலாலுதையும்பட்டு.

அமைதலின்று - அமைதல் இன்றி, அமையாமல். அன்பன் - சிறுத்தொண்டநாயனார். உதிர்வு - உதிர்ந்த பிட்டு. தார்மைந்தனாகிய நிலங்கொண்டவன் - பாண்டியன். சூரல் - பிரம்பு. ஐந்தொழில் - பஞ்சகிர்த்தியம். பயனதின்றும் - பயனின்றியும். சனகன் - தந்தை, மலையாசன்.

கான்நின்று அங்கனைதுறந்தும் - வனத்தில் நிலைபெற்று மனையாளைத் துறந்தும். கடம் கடத்தல் முதலாயின செய்து கதுவிணைந்து உண்பதுபுரிந்து

உறங்குங் காயம் கொண்டுறும் ஆசை கழல்வது என்று, ஒழிந்து அரிந்து முயன்று நினைந்து இன்புறுவது என்று; கண்டு அடைவது என்று; புரிந்து பண்படுவதென்று; கடையன் விழைந்து நின்று ஒழிந்து புகன்றுகொண்டு அமர்நாளென்று; என்க.

வெம்பும்படிவிழும் பெண்பால் இன்றுபலபகர்ந்து என்; என்செய்வது இன்று உன்னையொழிந்து உயல்வதும் இன்று. என்பாற் படர்வது உன்செயல் இறந்து உம்பரின் உறும்பதமும் என் துன்பாம் ஆதலின் அன்பு ஒன்றே யருள்வாயென்க.

பஞ்சுடையுமின்றி வளைந்தும் இரந்தும் அயின்றும் தபுதலின்றித் தொண்டு புரிந்தும் பூதநெருங்கிய சுடலைசென்று உழன்றும் உணவுகிடையாது அங்குள்ள பொடியும் அங்கமும் பூண்டு சுடலைப்புகையாற் புலமருண்டு அந்தணரைத்தொழும்பென்று இழி வறைந்து அவரிகழவும் பின்னும். அவர் கணிகை முன்புந் தூதுபோய் வந்து வில்கொண்டு அடிக்கும்படி அர்ச்சுனனோடு வலிய எதிர்த்தும் அப்பன்றியூன் கிடையாமல் தின்னுதலிழந்து உண்போர் யாவரொன்று தேடி வேடர் உண்டு உமிழ்தல் கண்டு அதனையுண்டு அடியுண்டு அமையாது அங்கதனையு முண்டும் பின்னும் பசியுழந்து உதிர்வுநின்று பாண்டியன் உடைந்தோடுகின்ற சலத்தை யடையென்று அடித்த பிரம்பு படும்படி நின்றும் ஐந்தொழில் செய்துந் தனக்கொரு பயனுமின்றியுந் திரியு நம்பன் உன்னை யடைந்து உன்றந்தையின் பொன்மலை வெள்ளிமலை கொண்டுறைந்தார் மண் பொன் சகலமுங்கொண்டுறத்தமிழ் நிலந்தந்திடுந் தாயேயென முடிக்க.

தந்தனத் தத்த தாத்த தந்தனத் தத்த தாத்த
தந்தனத் தத்த தாத்த தந்தனத் தத்த தாத்த
தந்தனத் தத்த தாத்த தந்தனத் தத்த தாத்த தனதான.

செந்தமிழ்ச் சித்தர் மார்க்க மொன்றிமுற் பற்று நீத்த
சிந்தனைத் திட்ப நோக்கின் வங்கமொத் தொட்பம் வாய்த்த
திண்கழற் பொற்பு நோக்கி முன்புறப் புக்கு மீட்பில் பவமாய

சிந்தினுட் சுற்ற னீத்து நின்றவொப் பற்ற வீட்டின்
இன்பினைப் பற்ற வேட்கை கொண்டுமுட் புக்கு வாட்டு
செந்தழற் கொத்த நோக்கின் மங்கையர்ப் பற்று காட்சி தொலையாதே

சந்தவெற் புய்த்த தேர்க்க ணின்றலர்க் கற்றை தூற்றும்
அங்கசற் கிற்று ழோர்க்க மொன்றிமுற் கற்ற நூற்கள்
சண்டன்வெப் பிற்கு மேற்சென் மஞ்செனப் பட்டு நீப்ப அலைபோலே

சஞ்சலப் பட்டு வேட்டை சென்றிளைப் புற்று வேர்த்தும்
என்பிணைப் பற்றி வாய்க்கொள் புன்செயற் குக்கல் போற்பொய்
தங்கெழிற் கச்சு மேற்கொள் கொங்கையிற் புத்தி போக்கி உழல்வேனோ

அந்தரத் துற்ற நாட்டி னைந்தருக் கற்கும் வேட்கை
கொண்டிடப் பொற்கை நீட்டி வந்தவர்க் கத்த நீர்ப்பெய்
தன்புறப் பெட்பி னீத்து வண்டமிழ்ச் சொற்கள் பாட்டின் வளமேவும்

அம்புயக் கொற்ற மேற்கொண் மைந்தர்நற் கற்பின் வாய்த்த
மங்கையர்ப் பற்றி நாட்டு முந்தறத் துற்று நீத்த
அந்தணர்க் கொத்த வூட்டி நைந்தவர்க் கச்ச நீக்கும் உயர்கூடல்

கந்தரத் துற்று மேற்செல் பைந்தருப் பற்றி நாட்டம்
ஒன்றிமைப் பற்ற தீர்த்தர் நின்றிவட் புக்கு வாழ்த்து
கப்புலைச் சொற்பெய் கோட்டம் வந்தசிற் சத்தி பேய்ச்சி கவுமாரி

கங்கைமுற் பெற்ற வேற்கை மைந்தனைப் பத்தர் போற்று
துங்கனைப் பெற்ற மோட்டு மெண்கரத் தப்ப னேத்து
கந்தனைப் பெற்ற சீர்த்தி யங்கயற் கட்பி ராட்டி உமையாளே.

(கு-ரை.) சித்தர் மார்க்கம் - யோகமார்க்கம். முற்பற்று - புறப்பற்று. சிந்தனைநோக்கின் - சிந்தனையாகிய கண்ணினால். சிந்து - கடல். நோக்கின் - நோக்கினையுடைய. சந்த வெற்பு - மலயமலை. சந்த வெற்புய்த்த தேர் - தென்றலாகிய தேர். அலர்க்கற்றை - புஷ்பபாணங்கள். சண்டன் - சூரியன். மஞ்சு - மேகம். முந்து அறம் - இல்லறம். கந்தரம் - மேகம். கோட்டம் - கோயில்.

ஒன்றி நோக்கினால் நோக்கிப் புக்கு நீத்துப் பற்ற வேட்கை கொண்டும் காட்சி தொலையாது,

அங்கசற்கு இற்று மூர்க்க மொன்றி நூற்கள் முஞ்சென நீப்ப அலைபோற் சஞ்சலப் பட்டுக் குக்கல் போற் புத்திபோக்கி யுழல்வேனோ என்க.

கற்பக முதலாகிய ஐந்தருக்களும் ஈகையைக் கற்கும் வேட்கை கொள்ள ஈததுப்பாட்டின் வளமேவு மைந்த ரென்க.

மைந்தர் பற்றி உற்று ஊட்டி நீக்குங் கூடலென்க.

நாட்ட மொன்றிய இமைத்தலற்ற தீர்த்தர்தருப் பற்றி நின்று இவட்புக்கு வாழ்த்து கோட்ட மென்க.

தனதனந் தந்த தத்தந் தனதனந் தந்த தத்தந்
தனதனந் தந்த தத்தந் தனதானா.

கருதிலங் கண்ட மட்டுங் கருநிறந் தங்கு பற்பங்
கமழுமின் கொண்டொர் பக்கம் புகைதானே
கனலொடுந் துன்ற லொத்துங் கருணையென் சிந்து முற்றுங்
கசியுமொண் கொண்ட லொத்துந் திருமாலே
பொருவறம் பொங்கு பொற்கொம் பெருதெனுந் துங்க வெற்பின்
புறமிருந் தங்க ணிற்குஞ் சிறுசேய்சீர்
புகவெழுங் கொங்கை யிற்றங் குறுபயந் தந்த நிற்கும்
புகல்வதென் றஞ்ச மெற்குன் கழலாமே
தருவுறுஞ் சந்த வெற்பன் சுடுசுரங் குன்ற முற்புன்
சமண்மதம் பொன்ற நற்பண் புகல்வார்சேர்
தனிமடஞ் சங்க மற்றுந் தருமிடங் கொண்டல் சுற்றுந்
தழைவுறுந் திங்க ளொத்தம் பொழின்மேவு
தெருவளந் தங்கு நித்தம் புகழ்புனைந் தன்பின் முற்றுந்
திருவர்செந் தண்டமிழ்க் கொண் டறைகூடல்
திகழுநங் கந்த னுக்கன் புடனிலந் தந்த முக்கண்
தெரிவையம் பொன் றளித்தங் குணமயாளே.

(கு - ரை.) அம் கண்டமட்டும் - அழகிய கழுத்துமட்டும். பற்பம் விபூதி. மின் - மின்போன்ற வடிவுடையசிவன். சிந்து - கடல். சிறுசேய் திருஞானசம்பந்தர். பயம் - பால். சந்தவெற்பன் - கூன்பாண்டியன்.

மடமும் சங்கமும் மற்றுந் தருமிடங்களும் கொண்டல் சுற்றுந் திங்களொத்துப்பொழின் மேவிய தெருவென்க.

தெருவளந் தங்குகூடல் திருவர் நித்தம்புகழ் புனைந்து அறைகூடலென்க.

மின்னையொருபக்கங் கொண்டு கருணைக்கடலே மழையாகக் கசிகின்ற கொண்டலொத்தும்புகை கனலொடுந் துன்றலொத்தும் திருமாலொத்த எருதெனும் வெற்பின் புறமிருந்து சேய்சீர் புகுமாறுதானே பயந்தந்த நினக்கும் புகல்வது என்னென்க.

திருஞானசம்பந்தர் முன்பு இடபவாகனத்தின் ஈசனோடுதோன்றிய காட்சி மலைமேல் மின்னொடுதோன்றிய மேகமும் கனலோடுதோன்றிய புகையுமொக்குமென்பது கருத்து. (கசு)

தனதன தனதனந் தானனந் தானன
தனதன தனதனந் தானனந் தானன
தனதன தனதனந் தானனந் தானன — தனதான

வடமொழி மறையினந் தேடியுங் காணரு
மலரடி கழகநின் றேநிலந் தோய்வுற
மனமுயர் தமிழ்வளந் தேறவந் தேமலர் — முகம்வாடி

வளரொரு பலகையின் பாலிருந் தேநிமிர்
மதிநிறை புலவர்முன் றாரநின் றேயுடல்
வளைவுற வுரைதளர்ந் தாசிலென் பாவினும் — நலைகூறு

திடமுளர் யவர்களென் றாகமொன் றேசொலி
இயல்புகல் கிலனெழுந் தீநிறைந் தார்விழி
தெரிவுற வழல்சிவன் பாலுமஞ் சாதெதிர் — புகல்கீரர்

தெளிவொடு நடவுகொண் டாய்நலந் தோய்மதி
திகழ்சுனைத யெனுமரும் பேயுநின் றுளிணை
சிரமுற வணிகுவன் பாடிநின் றேதமிழ் — புனைவேனே

கடலெழு மொலியினங் காடியின் பாலொளிர்
மணியொடு தாளமுந் தூமமின் சார்பல
கதிர்விடு மொளிசெயுந் தீபமுஞ் சேணுற — கதிரோடே

ஞலுடு மதியெனுந் தேசுகொண் டார்கடை
டணியிழை கொளநினைந் தோகைகொண் டேவிலை
கருதிடுபொழுதவன்பாவைகண்டேமருள் — இளையோர்கள்

மடமொடு வணிகர்முன் பேழ்மடங் கோதிய
தகவறு விலைதருந் தீர்வருஞ் சீர்திகழ்
மதுரையி னிறைவிகங் காளியம் பாலிகை — மகதேவி

மதுபதி குமரியென் டோளிவெண் போதுறு
கலைமக டிருவொடுஞ் சூழநின் றேவல்செய்
மலைமகள் விசயைநம் பூழியன் கோமகள் — உமையாளே

(கு - ரை) ஆசு - குற்றம். நவை-குற்றம். யவர்-யாவர். சுதை-அமிர்தம். ஒலியின் - ஒலியினையுடைய. அங்காடி - கடைவீதி. தூமஞ்சார்தீபம் - புகையாலெரியுந் தீபம். (காஸ்லயிட்) மின்சார்தீபம் - மின்சாரத்தாலெரியுந் தீபம். (எலெக்டிரிக் லயிட்.)

பலகையின் பாலிருந்து நிமிர்புலவர் முன்அடி நிலந்தோய்வு மனந்தமிழ் வளந்தேறவந்து முகம்வாடித் தூரநின்று உடல்வளைவுற உரைதளர்ந்து, திடமுளார் யாவரென்று, ஊகஞ்சொல்லி, இயல்புகல்கிலனாகித் தீவிழிதெரிவுற அழலுஞ்சிவன் பாலுமெனவியையும். கீராது நலந்தோய்ந்த மதியாகிய சந்திரனிடத்து விளங்குகின்ற அமிர்தமாகிய அரும்பொத்த நின்றாளென்க.

மணி கதிரும் தாளம் உடுவும் தீபம் மதியுமொக்குமென நிரனிரையாற் கொள்க.

கடையில்இழை கொளநினைந்து விலை கருதிடுபோது அங்குள்ள பாவையைப் பெண்ணென்று மயங்கிய இளையர் அம்மயக்கத்தால் அறியாமை யுடையராகி வணிகர்சொல்லிய அதிக விலைகொடுத்து அணிகொள்ளு மதுரை யென்க.

தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தனதன தனதன தனதன தனதன
தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தனதன தனதன தனதன தனதன
தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தனதன தனதன தனதன தனதன தனதானா.

வெற்புக் கொத்துப் பட்டுக் கச்சுக்
கிழிபட வெழுமிள வனிதையர் குவிமுலை
வெப்பத் துட்பட் டுத்துப் பற்றுத்
தழலுறு மெழுகென மனமிக வுருகிட
வித்தைத் திட்பத் தெப்பத் தைக்கைத்
தநுகளர் நிலமுறு விதையென வழிதர ஒகிர்தீபம்

விட்டிற் பட்டுப் பட்டுக் கெட்டுச்
சிறைகரு கிடவிழு செயலென வளர்பிணி
வெட்டைக் குட்பட் டிற்றுப் பொற்பற்
றுடறளர் பொழுதினு மயல்கொடு சிறுமியர்
மித்தைக் கட்சிக் கித்தட் டுக்கெட்
டறிவழி தரவெழு பவநிறை கடல்புகும் அடியேனும்

அற்பிற் பெட்டுச் சித்தத் தூக்கத்
திளையொரு வடியவர் கருதுன திருகழல்
அர்ச்சித் துப்பொற் புற்றுப் பற்றுக்
கனையவு முனதிசை விழையவு மனுதினம்
அத்தத் திற்கிச் சித்துக் கொட்புற்
றலைவது தொலையவு முயர்கவி பகாவும் அருள்வாயே

அட்டிற் புக்குக் கட்டுப் பட்டுப்
புடைபெறு ஞமலியி னுளமருள் கொடுபெறும்
அத்தற் செற்றுப் பெற்றுப் பற்றிப்
பரிவொடு புரவுசெ யனையொடு தழுவிய
அற்பப் புத்தித் துட்டற் கற்றைப்
பொழுதருள் பரசிவ னிடனமர் நினதருள் பணிவேனே

கற்புக் கற்புக் கொட்பப் பட்புக்
குயிரென நிலவிய குணநிதி திரிபுரை
கர்த்தர்க் கொத்துத் பொற்கைப் பற்றித்
தனுவென மலைவளை மலைமகள் சயமகள்
கற்றுத் தர்க்கத் துற்றுச் சுற்றிக்
கதறினு மறிவரு முதல்வியெ னகமொளிர் அறிவாயே

கட்புக் கொற்றிப் பெட்பிற் பற்றிக்
கவலைக ளிரிதர வுறைமறை பகர்கிளி
கர்ச்சித் தப்புத் துப்புத் துய்ப்பப்
பொழிபுய லெனவருண் மழைபொழி தவமுகில்
கர்ப்பப் பைக்குட் சிக்குற் றுத்தத்
துறுசிசு மறையவன் விடுசா முருவியும் உயிரேடே

பொற்புற் றுச்சுற் றத்துக் கத்தற்
கிரவியின் வரவரு ளொருதிரு மகள்பதி
பொற்பட் டுச்சுற் றித்தற் றுத்தற்
புகல்புகு மடியவர் துயர்தபு கருமுகில்
புட்பத் தக்கச் செப்பக் கைச்சக்
காமொளிர் பகன்மறை வுறவிடு நெடியவன் இளையாளே

புற்றுக் குட்புக் குத்திக் கெட்டுற்
றொளிர்பணி யவனியை முடிகொளு மொருபணி
பொற்கைக் கட்டுப் பட்டுச் சுற்றிப்
புரளுத லொருவிட மணியணி புனையனை
புற்கைக் பற்றிக் கற்குட் பட்டுத்
திகழ்கரி கழைதினு மதுரையி னகரமர் உமையவளே.

(கு-ரை) துப்பு - வலி. அது வித்தையாகிய தெப்பம். அற்பிற் பெட்டு - அன்பினால் விரும்பி. அத்தற்செற்று - தந்தையைக்கொன்று. துட்டன் - மாபாதகன். அற்பு - அன்பு. பட்பு - பண்பு. அப்புத்துப்பு - நீராகிய உணவு. சிசு - பரிச்சித்து. துக்கத்து அல் - துக்கமாகிய இருள். தற்று-இறுகக்கட்டி. புட்பத்து அக்கம் - மலர்போன்ற கண். புற்கை - புனைபோன்றகை. கற்றுட்பட்டுத்திகழ்கரி - கல்யானை.

பட்டு அற்றுக்கைத்துப்பட்டு இற்று அற்றுச் சிக்கித்தட்டுக்கெட்டு எழுபவக்கடல் புகுமடியேனென வியையும். ஞமலிபோல மருள்கொடு அத்தற்செற்று அன்னையொடு தழுவிய துட்டனெனக் கற்புக்கும் அன்புக்கும் பண்புக்கும் உயிரென்றது அவை உமையவளருளின்றித் தோன்றாமை நோக்கி பணியொரு விடமணியணிபுனை யன்னை யென்றது பாண்டியன் மகளாக அவதரித்த காலத்துச் சர்ப்பாபரணமின்மையின். (கஅ)

தனதான தனதன தானன
தனதான தனதன தானன
தனதான தனதன தானன
தனதான தனதன தானன
தனதான தனதன தானன
தனதான தனதன தானன தனதாரு.

திருமாது முதலிரு நால்வரு
மிசைமாது முனதிசை பேசுறு
செயல்காணி னவர்வயின் மேவுக
வெனவேவு பணிவிழி யாலுணர்
திறமேவி யருகுற வானவர்
புருகூத னயனொடு தானவர் பண்ணாகர்

திருமாலு மொருபுடை நாடொறு
மலர்தூவி வழிபட நான்மறை
தெரிவாரு முனிவரு மோர்புடை
புகழ்கூறி யயலுற நாரதர்
திரியாத தமிழிசை நூன்முறை
தனியாழி னமிழ்துறழ் மாணிசை நனிபாட

இருமாயை யிருவினை யாணவ
மிவைபோய மருளறு ஞானிகள்
இறவாத வுயர்மணி வாசக
னெழின்மேய சுகனென வீடுற
இசைமேய சிலர்புய லூர்தியொ
டுலகாளு மரசிவை யாதிய பெறநீடும்

எழுகோடி மறைகளும் நூபுர
மிடுதூய மணியென வேயொலி
இருபாத கமலமு நாடுவ
னினிவாதை யிலைநம னோடுவன்
எனையாவர் நிகர்பவ ராடுவ
னிசையோடு வளர்தமிழ் பாடுவன் அடியேனே

ஒருகோடி வடமலை வானவர்
பதியோடி யதுபரி பான்மையின்
உயர்தூண நிரைநிரை சார்வுற
வொளிர்கூட நடுவுறை தூயரும்
ஒழியாது நிறைபொயும் வாய்மையி
னுறைவாத வலியுடை வாயரும் விவகார

உருவாகி நிலையழி பேயரு
முயர்நீதி புரிபவர் சூழ்சிறை
புகுசாலை புகவுரை தீயரு
முறைவாதின் விடுதலை மேவிட
உணவோடு கலைதரு நேயரு
முறமேவு திருமலை நாயகன் உயர்மாடம்

௬௦ மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

மருவேம வரமனை நான்முகன்
வினையோநன் மயன்வினை போமெனு
மதிவாணர் சொலவுறு சீர்நிறை
வளமேவு மதுரையி னீண்மதில்
மதியோடு பொரவெழு கோபுர
மலர்மேய வயனுல கோடுற ஒருமீனும்

மருவாத வுயர்தட மூழ்குவர்
மயலோடு பிணிபவ மாய்வுற
மறையோடு தமிழிசை யாழியின்
மிகநாளு நிலவுறு கோயிலின்
வளர்தேவி பகவதி மாதவி
மகமாயி பரைசிவை யாரணி உமையாளே.

(கு - ரை) இரு நால்வர் - அஷ்ட லெட்சுமிகள். இசைமாது - கலைமகள். எழுகோடி - நம் முதலாய எழு அந்தங்களையுடைய மந்திரங்கள். வடமலை - மேருமலை. அது - வானவர்பதி. பரிபான்மையின் - தாங்குகின்ற தன்மையொப்ப. கூடநடுவு உரைதூயர் - கூடத்திருந்து நடுவுரைக்கின்ற நியாயாதிபதிகள். (முன்சீப் ஜட்ஜுகள்.) பொய்யும் வாய்மையைப்போல உரைக்கின்றவாயர். (வக்கீல்) சிறைச்சாலை புகுமாறு நீதிபுரிபவருரைக்கின்றதீயர் - தண்டனையடைந்தோர். நேயர் - விடுதலைபெற்றோர். ஒரு மீனுமருவாத்தடம் - பொற்றாமரைத் தடாகம். ஆழியின்மிக - கடலொலியினுமிகும்படி.

மேவுகவெனநீ விழியாலேவு பணியையுணர் திறமேவி இருநால்வருமாதும் அருகுற வானவராதியோர் வழிபடஅந்தணர் முனிவர் புகழ்கூறியயலுற நாரதர் யாழினிசைபாடஞானிகள் வீடுறச்சிலர் அரசாதிய பெறநீடிய பாதமெனவும்நூபுரமிடு மணியென எழுகோடி மறைகளுமொலிக்கின்ற பாதமெனவு முரைக்க.

தூயரும் வாயரும் பேயரும் தீயரும் நேயருமேவுதிருமலைநாயகனரமனையென்க.

மதில் மதியோடுபொரக் கோபுரம் அயனுலகோடுறப் பிணிபவமாய்வுறத் தமிழிசை ஆழியின்மிக நிலவுறு கோயிலென்க. (௧௧)

தனன தாந்தன தனன தாந்தன தந்தான
தனன தாந்தன தனன தாந்தன தந்தான
தனன தாந்தன தன்ன தாந்தன தந்தான தனதானு.

கரும நான்கிரு வகையும் வாய்ந்திடு மங்கோல
தருவி லாங்கதன் விரைய தூர்ந்துசெல் பண்போடு
கலைக டேர்ந்தவர் வசிய மோர்ந்துசெ யொண்சீர்கொள் சிலையாய

கடிய காந்தமொ டிருளி னோங்கய முன்போதல்
எனவு மேந்திழை தனது காந்தனொ டொன்றாய
கரும மேய்ந்துற லெனவும் வான்றரு முன்பேறு கொடிபோலும்

அருளி னாழ்ந்திடு கடலி னீண்டுசெல் பொங்கோத
நதிகள் பாய்ந்துற லெனவு பாண்கழ லன்போடும்
அடிய னேன்றன தகமு நேர்ந்துற வந்தேனுன் அருளாலே

அகில வாஞ்சையு முடலின் வாஞ்சையு மொன்றாமல்
மதுர மார்ந்தொளிர் தமிழின் மாண்கலை குன்றாமல்
அறிவி னாய்ந்துன திருப தாம்புய மும்பாட அருள்வாயே

பருவ வான்புயல் பொதியின் மாண்கிரி நின்றேபெய்
உதக மோங்கிய நதியின் மாண்பது குன்றாத
பயனின் மேம்படு வலிகொள் பாண்டியர் தந்தேயம் உறுவோர்செய்

பழமை வான்றவ முழுதுமீண்டிய பண்பேபோல்
உறுதி யாய்ந்தவர் கழக மோங்கிய வொண்கோயில்
பரவ வாழ்ந்திடு திரிபு ராந்தகி கங்காளி அபிராமி

மருவு மாங்குடி மருத னாய்ந்தொளி ருந்தூய
கபில னீண்டுயர் புகலி வாழ்ந்தவன் வண்கீரன்
மறுவி லான்றவர் பலரு மீண்டிய ணிந்தோது புகழ்மேவு

வரைகள் சூழ்ந்தென விலையுள் வாய்ந்துய ரும்போர்விண்
மறைய நீண்டுறு பழன மோங்கிய நங்கூடன்
மதுரை யாண்டுறை கவுரி சாம்பவியெண்டோளி உமையாளே.

(கு - ரை) அங்கோலதரு - அழிஞ்சின்மரம். அயம் - இரும்பு அகம் - மனம். கழகமோங்கியகோயில் - கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த மதுரைக்கோயில். புகலிவாழ்ந்தவன் - திருஞானசம்பந்தர். நான்கிருவகைக்கருமம் - வசியமுதலாய அட்டகன்மங்கள். அட்டகன்மத்துக்கு அங்கோலதைலமும், வசியத்துக்குக்காந்தமும் இன்றியமையாதன வென மந்திரநூல்கூறும். அங்கோலதருவில் அதன்விரையூர்ந்து செல்பண்பென மந்தமாகவேனும் காந்தமுன் செல்லும் இரும்பெனத் தீவிரமாகவேனும் காந்தனோடு ஒன்றும் ஏந்திழையெனப்பேதமாகவேனும் தருமுன்பேறுகொடியெனப் பேதாபேதமாகவேனும் கடலிற் செல்லும் நதியென அபேதமாகவேனும் நினது கழலின்கண் அடியனேனது அகம் நேர்ந்துறவந்தேனென்க.

௩௨. மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

ஒன்றுமல் குன்றுமல் கலையை யாய்ந்துபாட அருள்வாயென்க.

பொதியிற்கிரியிற் புயல்பெய் உதகமோங்கியநதி - தாமிரபருணியும் வையையும்.

மருதன் முதலாயினார் அணிந்தோதியபுகழ் மேவிய கூடலெனவும் பழனமோங்கியகூடலெனவும் போர்விண்மறைய நீண்டுறுபழனமெனவு முரைக்க.()

தனதன தந்தந் தந்தந் தனதன தந்தந் தந்தந்
தனதன தந்தந் தந்தந் தனதந்தந்
தனதன தந்தந் தந்தத் தனதன தந்தந் தந்தந்
தனதன தந்தந் தந்தந் தனதந்தந்
தனதன தந்தந் தந்தந் தனதன தந்தந் தந்தந்
தனதன தந்தந் தந்தந் தனதந்தந் தனதானா

தழனிகள் பங்கந் தங்குஞ் சலசமு மென்பந் துஞ்சந்
தனகிரி யும்பொன் குன்றுங் கழையஞ்சஞ்
சனமத கன்றின் கொம்புந் தழைவுறு தெங்கம் பிஞ்சுந்
தளர்வுற வென்றும் பந்தங் கெடவொன்றுந்
தவர்களி னெஞ்சுங் கொன்றும் பணைமுலை நஞ்சந் தங்குஞ்
சரவிழி மஞ்சுங் குன்றுங் குழலொன்றந் தகமாதர்

சனிமக மொன்றும் பண்பொன் றியவள றங்கந் துஞ்சுந்
தகவினை யின்பென் றெண்கொண் டலைநெஞ்சந்
தளிர்நிகர்பண்பொன் றுன்றன்கழல்களிரண்டுங்கொண்டேன்
டவமுற வும்பண் டங்குந் தமிழ்கொண்டுன்
றனியிசை யொன்றுந் துங்கம் புகலவு நண்பும் பண்பும்
தழுவவு மின்புந் துன்புஞ் சமமென்றிங் கியமாதி

பழகவு மென்கண் கொண்டுன் றிருவடி கண்டுன் றெண்டும்
பயிலவும் வந்தென் றுன்பொன் றகமம்பொன்
படர்கன னின்றுந் துங்கம் பெறலினொளிர்ந்தன் பொன்றும்
படியுமு வந்தென் றுந்திங் களுமொன்றும்
படியடி நின்றும் பொங்குங் கனலதெ மூம்பும் பண்பும்
பயனொடு தந்தென் பந்தங் கெடநின்றிங் கருள்வாயே

பரசிவன் வெண்சங் கங்கொண் டுறுமரி கஞ்சந் தங்கும்
பகவன னந்தங் கண்கொண் டவனண்டம்
படர்சுரர் சந்தந் துன்றுங் கிரியுறு துங்கன் சங்கம்
பரவிய வொண்பண் பொன்றுந் தமிழ்கொண்டும்
பயின்மறை கொண்டும் பண்கொண் டிசைகழ லென்றுந் தங்கும்
பரிசுற நெஞ்சங் கொண்டந் தகர்துன்புந் தவிர்வேனே

கழகமுன் வந்தங் கொண்பொன் றருமிகை தந்தன் பொன்றுங்
கவுரியர் துன்பம் பொன்றும் படியின்பங்
கருதிய வன்பென் றெண்கொண் டுறுமொழி முந்தும் பண்பொன்
றுறுபது சந்தந் துன்றுங் கவிதங்கும்
களவியல் சங்கங் கொண்டின் புறவரு ணம்பன் பங்கின்
கவுரித ரங்கந் துன்றுங் கடலுண்கண் கலையூர்வாய்

கவுணியர் துங்கன் சந்தந் தழைகவி கொண்டுன் கொண்கன்
கழல்புக முன்பந் தம்பொன் றமிழ்தங்கண்
கடிதருள் சிங்கந் துன்றும் பகவதி நிம்பந் துன்றங்
கயல்விழி யண்டந் தந்தெங் கணுமொன்றங்
கனைபரை யென்றுந் தங்கும் புகழ்வளர் சந்தங் கந்தங்
கமழ்முனி குன்றந் துன்றுந் தமிழ்கொண்டிங் குயர்கூடல்

சுழலுறு பஞ்சென் றெங்குந் திரிபவர் புன்கண் பொன்றுந்
தொழில்வள மென்றுந் தங்கும் பதிவந்தெந்
துயர்தபு பண்பொன் றுஞ்சண் டிகையனை பண்டுந் தொண்டன்
சுதையென முன்பங் கண்சென் றுறுமண்டந்
தொழுசிலை யின்றுந் தொண்டின் பரிசுக ளின்றுந் தஞ்சந்
தொடருமென் முன்புஞ் சென்றம் பதகஞ்சந் தருதேவி

சுடலையி னின்றுந் தொங்குந் தொடலையி னம்பொன் பெண்டுந்
துகளென முன்கண் டங்கந் தனையும்புன்
சுமையென நெஞ்சங் கொண்டுன் கழலடி நம்புந் திண்பைந்
துறைபுகு பண்பொன் றந்தண் டவரென்றுந்
துதிசெய மன்றந் தங்குந் திருநட னங்கொண் டைந்தென்
றெழிலுட னென்றுந் துங்கந் திகழின்பொன் றமையானே.

(கு - ரை.) பங்கம் - சேறு. சந்தனகிரி - பொதியில். கழை - மூங்கிற் கோல். அளறு - நரகம். அனந்தங்கண் கொண்டவன் - இந்திரன். கவுரியர் - பாண்டியர். களவியல் - இறையனாரகப்பொருள். கவுணியர் துங்கன் - திருஞானசம்பந்தர். அமிழ்து - முலைப்பால். நிம்பம் - வேப்பமாலை. அங்கயல்விழி-அங்கயற்கண்ணம்மை, இது இயற்பெயர். முனிகுன்றம் - அகத்தியர்மலை, பொதியில். புன்கண் - துன்பம். தொடலை - மாலை. துறை - தவத்துறை. பங்கந் தங்குந்தழல் நிகர் சலசமென்க.

சலசமும் பந்துங்கிரியும் குன்றும் கொம்பும் பிஞ்சும் தளர்வுறவென்றும் தவமுடையார் நெஞ்சையுங் கொன்றும் பணைத்தமுலையென்க.

முலையும் விழியும் குழலுமொன்றிய அந்தகர்போன்ற மாதரென்க.

மகத்துற்ற சனிபோலக் கேடுபயக்கின்ற நிரயத்திற்கேதுவர்கிய மாதராது அங்கமென்க.

அங்கந்துஞ்சுந்தகவினை யின்பென்று மயங்கியலைகின்ற என்னெஞ்சம் தவமுறவும் புகலவும் தழுவவும் பழகவும் பயிலவும் நீ என்முன் வந்து, என் துன்பொன்றிய அகம் பொன் கனலினின்றுந் துங்கம் பெறல்போல ஒளிர்ந்து அன்பொன்றும் படியுமுவந்து ஒன்றும்படி பண்பும் பயனொடு தந்து, என் பந்தங் கெட என்னுள் நின்று அருள்வாயென்க.

சிவன் முதலோர் தமிழ்கொண்டும் மறைகொண்டும் பண்ணுட னிசைக்கின்ற நின்கழலைப் பரிசுறும்படி நெஞ்சங்கொண்டு துன்புந் தவிர்வேனென்க.

கழக முன்வந்து தந்து பொன்றும்படி இன்புற அருள் நம்பனென்க. இன்பங்கருதிய களவியலெனவும் அன்பினைந்திணையென்னும் எண்கொண்டுறுமொழி முன்னின்ற களவியலெனவும் அறுபது சூத்திரங்கொண்ட களவியலெனவு முரைக்க.

கவுணியர் துங்கன் கவிகொண்டு உன்கொண்கன் கழல்புக அவற்கு அமிழ் தருளிய பகவதியென்க. கூடலாகிய பதியில்வந்து துயர்தபு சண்டிகையென்க. முன் ஒரு தொண்டன் முன்பு அவன் மகளெனச்சென்ற சிவையே இன்று, தொண்டின் றியும் கருணையால் பதமலரளித்த தேவியே யென்க.

மண்பெண்ணுதியன சுடலை மாலைபோலத் துகளுடையனவென் றறிந்து உடம்பும் புன்சுமையென உணர்ந்து அவற்றை நீத்து உன் கழலடி நம்புந் தவரென்க. (௨௩)

தாத்தன தத்தந்தந் தானன தானன
தாத்தன தத்தந்தந் தானன தானன
தாத்தன தத்தந்தந் தானன தானன தனதானா.

பாற்கட லுற்றுஞ்சிந் தாமணி யாதிய
ஏற்றிடல் விட்டுண்புன் றீனிகொண் மீனிகர்
பாக்கிய முற்றொன் றுந் தேர்கலில் யானுன தருட்டோய்சார்

பாற்கழல் பெற்றும்பொன் றூவுயர் வீடது
வேட்டிட லற்றம்பொன் றேடியும் வானுறு
பாற்படு மொட்பங்கொண் டாரமு தாரினும் அமையாதே

தோற்கழல் பற்றும்பண் பேயுறு நாயென
வாய்த்திடு முச்சங்கந் தோய்தமிழ் வாரிதி
தோற்றமு துட்கொண்டுந் தீயபெண் மாசுறு பயமேதோய்

தோற்பையை மற்றுங்கொண் டாடியும் வேனிலின்
மார்க்கம டுக்குந்திண் கானலொண் மானெதிர்
தோற்றிட முற்றுங்கண் டோடலின் வாடியு முழல்வேனே

கார்க்கட லிற்றங்குஞ் சீர்திகழ் மேனிகொள்
பார்ப்பதி கற்கண்டுந் தேனுநெய் பாலொடு
காய்ச்சிய நற்பண்டம் போலினி தாகிய கவிமாலை

கார்ப்புயன் மொய்த்தெங்கும் போயுற வேபொழி
தோற்றம தொத்துன்றன் றூண்மலர் பூணவொல்
காப்பணி யொத்தென்றும் பாடவு நாடவும் அருள்வாமி

போர்க்கெழு செற்றங்கொண் டேயிகல் வார்களும்
ஏத்துறு நட்பொன்றுஞ் சால்புற நூல்பல
பூத்தெழு நுட்பங்கொண் டேமனம் வாழ்வுற நினதாளே

போற்றிட வத்தந்தந் தோகைகொ ளீகையின்
ஏற்றமொ டெச்சங்கொண் டேயுற நானுறை
போக்கறு மெய்த்தொண்டின் பாடல்கொள் கூடலின் உமையாளே.

(கு - ரை.), பாக்கியம் - ஊழ். கழல் - செருப்பு. பயம் - பால், அச்சம். மீனிகர் யான் பொன்தேடியும் நாயெனக் கொண்டாடியும் மானோடுதல் போல ஓடிவாடியு முழல்வேனே என்க.

பணியொத்து உன்றாள் பூணுமாறு புயல்பொழி தோற்றமொத்து நான் கவிமாலை பாடவென்க.

சொல்புறவும் வாழ்வுறவும் போற்றிடவும் ஏற்றமும் எச்சமுங் கொண்டுறவும் நானுரைத்த பாடலைக்கொண்ட கூடலென்க. (௨௨.)

தனதானன தானன தானன
தனதானன தானன தானன
தனதானன தானன தானன தனதான.

உடலாதிய சூனிய மாமுன
திருதாள்களு மேபொரு ளாமென
ஒருவேளையி லேதெளி வேனினி ஒருவேளை
உயிரேதுபி னேம்பவ மேதருள்
முதலேதென வேமருள் வேனினி
ஒருவேளையி லேயெது வோவென நிரையாயர்
மடவார்தயி ரேகடை போதுறு
கயிறேயென வேயொரு பாவினும்
மருவாதயிர் பான்மைய ஞருவன் இதுவேயென்
மதியாமெனின் யானுயு மாறெவன்
மகராசகு மாரியுன் மாணடி
மறவாவர மேதரு வாயெதிர் வருவாயே
வடபால்வரை சாபம தாகவும்
விடவாசுகி நாணென மேவவும்
வளையாரணி நாரணி பூரணி அபிராமி
மதுராபுரி மேவுத டாதகை
கருணாகரி காளிபு ராதனி
மகராலய மேதுயின் மாதவி கவுமாரி
குடபால்வரு கோர்பிறை சூழ்குழல்
மகமாயிம னோன்மனி யோகினி
குமரேசர்க சானனர் தாமடி தொழுதாயே
குறியாதுமெ னேர்வரு கோமளை
உருவேயரு வேயரு ளேமதி
குலமேவிய தேவிகு ணாகரி உமையாளே.

(கு - ரை.) பொருள் - மெய்ப்பொருள். முதல் - கடவுள். அயிர்த்தல் ஐயுறல். வடபால்வரை - மேருமலை. மகராலயம் - கடல்.

மகராலயமேதுயில் மாதவியென்றது உமையவளே திருமாலாகவுருக்கொள் ளல் நோக்கி. பிறைசூழ்ந்த குழலெனவும் பிறைபோன்ற நெற்றியைச்சூழ்ந்த குழலெனவுமுரைக்க.

(௨௩.)

தனதானன தத்தத் தத்தன தனதானன தத்தத் தத்தன
தனதானன தத்தத் தத்தன தனதானன தத்தத் தத்தன
தனதானன தத்தத் தத்தன தனதானன தத்தத் தத்தன தனதானா

மருளேதுமில் சித்தத் தற்புத
மனுவோதிய ருச்சித் தூத்தம
வழிபாடுசெய் பத்தர்க் கெட்டொடு
முறழ்நாலிரு வர்க்கத் தூக்கலை
வசியாதிய வெட்டுத் தக்கன
வணிமாமுத லெட்டுச் சித்திகள் மகவாதி

வகையாறொடு பத்துப் பற்பல
திருவார்பத முத்திக் குய்த்திடு
வழியாகிய வெட்டுத் தூக்கமி
லுயர்யோகிய லெட்டுத் திக்கையும்
வசமேசெயும் வெற்றிப் பெட்புற
வுரைநாநல மற்றொட் பக்கவி யுகண்மேன்மை

அருளாலுயர் சிட்டர்க் கிட்டமும்
வெகுளாவிழி துட்டர்க் கச்சமும்
அவைவேதரு மொப்பற் றுத்திக
முரைவாய்மையு மற்றைத் திட்பமும்
அவர்தாமுறு பெற்றிக் கொத்துட
னருண்ஞானவ ரத்தப் பொற்கழல் யணிவேனோ

அடியேனையு மற்பிற் றக்கவர்
குழுவோடுற வைத்துப் புத்தியின்
அசைவேகெட வுட்புக் கற்பக
எறியாதுசெய் தப்பிற் குச்சினம்
அடையாதொளிர் செப்பத் தூற்றுன
திசைபாடிவ ழுத்திப் பொற்புற அருள்வாயே

குருவாய்வட முற்றுக் கற்றவ
ரொருநால்வர்ம னத்துப் பற்றிய
குறையாவுமு டித்துச் செப்பரு
மறைஞானமு ரைத்துத் தெற்குறு
குறுமாமுனி வற்குப் பொற்பமை
தமிழோதிய க்கற்றைப் பொற்சடை அருள்வாரீ

குணமாநிதி முக்கட் செக்கரி
னுறுமேனியன் வெற்றிச் சத்திகொள்
குகன்வாய்வரு மர்த்தத் துக்கக
மகிழ்வாமன்ம கத்திற் றக்கன்மெய்
குறைவீரன்ம றைக்குட் புக்துறை
யறவோன்மழு வத்தத் திற்றிகழ் பரமேசன்

மருவார்புர முற்றச் செற்றவ
னிலமாதிய வெட்டுப் பெற்றிமை
வடிவாயவ னெட்டெட் டுத்திரு
விளையாடல்செய் கொற்றத் துப்பல
வளமேவிய முத்திப் பொற்பதி
மதுராபுரி யிச்சித் துற்றொளிர் தமிழ்மாதா

மலயாசல முற்றுப் பொற்புறு
மொருராவண னச்சத் திற்றமிழ்
வளநாடது விட்டுத் தெற்குற
விடுமாமுனி யர்ச்சித் துத்தொழு
வளர்மீனுறு வெற்றிப் பொற்கொடி
யுறுதேவிக யற்கட் பத்திரை உமையாளே.

(கு - ரை) மனு - மந்திரம். எட்டொடு முறழ்நாலிருவர்க்கத்துக்கலை - அறுபத்து நான்கு கலைஞானம். வசியாதியவெட்டு - அட்டகன்மங்கள். மகவாதி வகையாறுபத்து - பதினாறுபேறுகள். பற்பலதிருவார்பதம் - இந்திரன்முதலிய இறையவர்பதங்கள். எட்டுயோகியல் - இயமாதியட்டாங்கயோகங்கள்.

சிட்டர்க்குஇட்டமும் துட்டர்க்கு அச்சமுந்தருமுரை - சாபானுக்கிரக சத்தி வாய்ந்தசொல்.

வடம் - ஆலமரம். நால்வர் - சனகாதியர். நிலமாதியஎட்டு - ஐம்பூதம் இரவி மதி ஆன்மா என்பன. எட்டெட்டுத்திருவிளையாடல்-அறுபத்துநான்கு திருவிளையாடல்.

தெற்குறவிடுமுனி - இராவணனைக்கந்தருவத்தாற் பிணித்துத்தமிழ் நாட்டிலியங்காவண்ணந்தடுத்து அதற்குத்தெற்கே செல்லும்படி விடுத்த அகத்திய முனிவர்.

பத்தர்க்குக்கலையும் தக்கனவும் சித்திகளும் மகவாதியவும் பதமும் யோகியலும் வெற்றியும் ஞாலமும் கவிபுகல்மேன்மையும் இட்டானிட்டந்தரும் உரை வாய்மையும் திட்பமும் அருள் கழல் பணிவேனென வியையும். சிவன் அறுபத்துநான்கு திருவிளையாடல் செய்தபதியாகிய மதுராபுரியென்க. (உ௪)

தனதாத்தன தத்தத் தத்தன
தனதாத்தன தத்தத் தத்தன
தனதாத்தன தத்தத் தத்தன தனதானா.

அறநீத்திடு சித்தக் கற்பிலர்
மபலாற்செயல் கெட்டுத் தூர்க்குண
மதுவாய்த்திட லுற்றுப் பற்பல துறையேபோய்

அவமாய்ப்பிணை மொத்துக் கற்றவர்
புகல்வர்த்தையும் விட்டுப் பத்தினி
அகம்வேர்ப்பம ருட்டிப் புத்தமு தெனமாழ்கி

உறவார்த்தக டற்பட் டுப்படர்
அரன்வாய்ப்படு நச்சுக் கொப்பென
ஒருமாத்திரை யிற்றுக் கக்கடல் புகவேசெய்

துணர்வோட்டவ ரக்கத் திற்புரள்
சிறுநோக்கவ லைக்குட் சிக்கினும்
உன்தாட்டுணை யர்ச்சித் துத்தொழல் மறவேனே

திறவாக்கத விற்குட் புக்கொளி
கலர்பாற்புக லுற்றுப் பொய்ப்புகழ்
தின்மேத்திவ யிற்றுக் குத்திரி புலவீர்காள்

சிவனார்க்குமு வப்புற் றுப்புவி
தருமாற்றல்ப டைத்துப் பொற்பொடு
திகழ்பார்ப்பெண்மு கத்துக் கொத்தொளிர் உயர்கூடல்

பிறவாக்கதி சித்தத் துற்றொரு
தரமேத்தினு முற்பட் டுத்தரு
பெருமாத்தளி யுற்றிச் சித்தன பெறுவீர்நீர்

பெரிதேத்துமி னற்பிற் பொட்டென
எனநீத்தவர் பற்றிப் புக்கருள்
பெறுமார்க்கமு ரைத்துப் பற்றுறும் உமையாளே.

(கு - ரை). திறவாக்கதவு - இரவலர் நுழையாவண்ணம் அடைத்துவைக்குங்கதவு. கதவு இல் - அக்கதவினையுடைய வீடு. கலர் - கீழ்மக்கள்.

புலவீர் இச்சித்தன பெறுவீர் கூடலின்கண் மாத்தளி யுற்றுப்பொட்டெனத்துமின் என அருள் பெறுமார்க்கமுரைத்து நீத்தவர் பற்றுறு முமையாளே என்க. (உ௫)

தனதன தந்தன தத்தன தனதன தந்தன தத்தன
தனதன தந்தன தத்தன தனதானா.

அறுசுவை யுண்டிவி ருப்பிலன் மதியமு துண்டுன்ம லர்க்கழல்
அடையவி ரும்பின னுத்தர மொழிவேதம்
அதனினு மிஞ்சுசி றப்புறு தமிழ்மறை சிந்தையு ணர்த்திநி
ரதிசய துங்கவ டித்துணை அருள்வாயே
குறுமுனி முன்புகல் சித்தர்கள் வழிவழி கொண்டும றைத்துரை
குலவிய வந்தம கத்துவ மறையோவு
குறிபல கொண்டுவெ ளிப்படர் குரைகழல் கண்டும னத்தொரு
குறைவுமி லன்புநி றைத்திசை புகல்வேனே
நறுமண மொன்றுகு ழற்புயல் பிறைமதி நின்றுசு டர்ச்செய
நகைவிளை துங்கவெ யிற்றொளி தவழ்தூய
நவையறு கஞ்சமு கத்திரு குவளைய லர்ந்துத ழைத்துற
நலமுடன் வந்தென கத்தொளிர் சிவகாமி
மறுவறு மிந்துகு லக்கொடி வரைசுதை யங்குச நற்கழை
வளைவிலொ டைந்தும லர்க்கணை யொடுபாசம்
மலர்நிகர் செங்கையு றத்திகழ் கவுரிதி கம்பரி கொற்றவை
மதுரைவ ளர்ந்தக யற்கணி உமையாளே.

(கு - ரை) உத்தர மொழிவேதம் - ஆரியவேதம்.

உன்கழலடைய விரும்பினன். அதற்கேதுவாகிய தமிழ்மறைப் பொருளு ணர்த்தி அடித்துணையருள். அருளின் அம்மறையிற்சொல்லிய குறிகொண்டு கழல்கண்டு அன்புநிறைத்து இசைபுகல்வேனென்க. (௨௬)

தானதந்தன தானதந்தன
தானதாந்தன தானன
தானதந்தன தானதந்தன
தானதாந்தன தானன
தானதந்தன தானதந்தன
தானதாந்தன தானன தனதானா.

யோகமந்திர வாதமுந்துணை
யாமுபாங்கமு மார்தமி
ழூடுறும்பரி பாடைகொண்டுயர்

நீண்மயேந்திர மாமலை
யோகிசந்திர சேகரன்றவ
காதர்வாழ்ந்திட வோதிய மறைதேரும்

பூகமும்பிற தூயசெந்தமிழ்
நூலும்வான்சுர ரோடுவி
யோமவிந்திர னாதிபுங்கவர்
மேன்மைவாய்ந்திட வேபகர்
யூபமந்திர வேள்விகொண்டுயர்
சாகையோங்கிய வேதமும் வழியாக

மோகமென்பது போயவந்தண
ரோதுமாண்பெறு நூல்களும்
மூலமந்திர மோதியெண்பெறு
கோணமோர்ந்துனை நாடிடின்
மோடுகின்றய லாழ்குளம்புகு
நீரின்வாய்ந்துற வேதரும் அருள்பாடி

மௌனமொன்றிய தூயவன்பர்கள்
சார்புநான்புகு மாறருள்
மூவருங்கொழு ஞானநன்கழல்
பாடிமாண்புகழ் பாடியுள்
மோதிநின்றெழு காமவெங்கனல்
கோபமாந்தழன் மோகமும் ஒழிவேனை

நாகமண்கனல் காலிரும்புனல்
யாவுமாய்ந்திடு நாளினும்
நாதர்செஞ்சடை யீசர்சுந்தரர்
பாகம்வாழ்ந்திரு வீர்களும்
நாநலம்பெற வோதுசெந்தமிழ்
மேயபாண்டியன் வேள்வியின் வருதேவி

நாரியம்பிகை 'காளிசண்டிகை
வாலைசாம்பவி நாரணி
நாககங்கணி பாலைதங்கிய.
யாளியூர்ந்திடு வாமிமுன்
னல்கரந்திக மேகதந்தன்முந்
நாலெண்வாய்ந்திடு தோளினன் விறல்வீரன்

சஉ மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

மேகமொன்றுரு வாரரன்றிரு
நாதனீன்றரு ளாரியன்
வேகமொன்றிய ஞாளியென்பரி
யேறுவோன்பணி தாய்பரை
வீரியந்தரி ஞானசுந்தரி
மாதுகாஞ்சன மாலையின் மகளாதி

வேதபுங்கவி நீலகந்தர
மார்புராந்தகி வாளொடு
வேழமென்சிலை பூவினைங்கணை
சூலமேந்திய மாதவி
வேள்விதங்கிய கார்வளந்திகழ்
கூடல்வான்பதி மேவிய உமையாளே.

(கு - ரை) உபாங்கம் - கற்ப சிற்ப சோதிட வைத்திய சாமுத்திரிக முதலாயவை. பிறசெந்தமிழ்நூல் - தொல்காப்பியமும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண் கீழ்க்கணக்கு முதலாயவும். வழியாகவோது நூல்கள் - வேதத்தின்வழியாக வோதிய மிருதி புராணாதிகள்.

யோகியாகிய சந்திரசேகரன் மயேந்திரமாமலையில் அகத்தியர் முதலாய தவநாதர் வாழ்ந்திடத் தமிழ்ப்பரிபாடை கொண்டு ஓதியயோகம் மந்திரம் வாதம் உபாங்கம் பொருந்திய தமிழ்மறைதேரும் யூகமும், பிறதமிழ்நூலும் வடமொழிவேதமும் அதன்வழிநூல்களும் நாற்பத்து முக்கோணமுதலாய எண் பெறுகின்ற கோணங்களை யறிந்து உன்னை நாடிடின் மேட்டிலிருந்து அயலிலுள்ள ஆழ்ந்தகுளத்திற்செல்லும் நீர்போல வாய்ந்துற அத்தமிழ் மறைமுதலாயவற்றை யடியார்க்குத் தருகின்ற அருள்பாடி யென்க. (௳௭)

தனனதந்தன தனனதந்தன தனனதந்தன தனதன
தனனதந்தன தனனதந்தன தனனதந்தன தனதன
தனனதந்தன தனனதந்தன தனனதந்தன தனதன தனதானா.

மதனைவென்றது நடுவணொன்றிய
விருவிர்தம்பொது விழியினின்
மருவுவெங்கன லெனிலரன்றிற
லரையதென்பது புதிதிவ்
வகைதெரிந்திடி னுவகைதுன்றுநன்
முகமனன்புரை கொடுமதன் உடல்வேணி

மதிபுனைந்தவ னெரியவென்றன
னெனமெயன்பர்கள் பலபல
வரைவதுந்தகு மெமனைவென்றது
சிவனிடந்திகழ் பதமென
மறைதெரிந்தவர் புகல்வரங்கது
நினதுபங்கய பதமெனல் எவர்தேரார்

இதுதெரிந்திடி னனையவென்றியி
லமலர்பங்கில ரெனவுமெய்
எமனைவென்றதொ ரிசையின்விஞ்சிய
விசையு முண்டுகொ ளுலகினில்
இதுநினைந்தன தரியவென்றிகொ
ளடிபுனைந்திட வுயர்கவி பகர்வேனே

எனையுமன்புறு நினதுதொண்டரி
னருகிருந்திட வினிதருள்
எளியனென்கவி தனையுநன்கவி
யெனவிழைந்திரு பதமலர்
இணைபுனைந்தரு ளனையநன்கவி
புகலுமன்பர்த மிடர்கெட அருள்வாயே

விதுவுமென்றுடு சுரர்புரந்தரன்
விதியுமன்பதை யுலகமும்
விரிபெருங்கட லுயர்பொலன்கிரி
யுரகருங்குல வரைகளும்
வெளியுமங்கியு மொருபுறங்கரு
வெனவிருந்தொளிர் வயிறுடை ஒருதாயே

விமலர்பங்குறை யுரககங்கணி
சிவைநிரஞ்சனி வினைகெட
விரைவில்வந்தெனை தகமுறும்பரை
குமரிசங்கரி நிருமலை
விமலையெண்குணி கவுரிசண்டிகை
விசையையம்பிகை திரிபுரை தனியாளே

பதுமவொண்கர முறுதிகம்பரி
யலனுயின்றிடு பகவதி
பரவிவந்தனை செயுமொரந்தணன்
மகளெனும்படி யவளொடு
படருமங்கரி பசியினைந்திடு
முயிர்களின்புற வருளிமனல் இருநாழி

படியளந்துள மகிழுறம்புரி
தருமமின்கொடி சரவண
பவனைவண்டமிழ் மதுபமையம்பதி
யரசெனும்படி தருமொரு
பரமசுந்தரி கவுரியன்பெறு
தனையையன்புறு கயல்விழி உமையாளே

(கு - ரை) பொது விழி - நெற்றிக்கண். முகமன் - உபசாரம். விது - சந்திரன். என்றூ - சூரியன். விதி - பிரமன். பொலன்கிரி - மேருமலை.

அன்பர் உவகை பொருந்திய முகமனுரையும் அன்புரையும் கொண்டு மதனுடல் எரிய மதிபுனைந்தவன் வென்றனனென்ன வரைவதுந்தகும் என்க. (உஅ)

தனதந்தன தானதன தனதந்தன தாத்தத்தன
தனதந்தன தானதன தனதந்தன தாத்தத்தன
தனதந்தன தானதன தனதந்தன தாத்தத்தன தனதான

குகைமுன்படை யோராயிர நரர்தங்களை மாய்த்துத்தின
வருசண்டனை நேர்பூதமெய் கிழியும்படி யேத்தித்தொழு
தறையொன்றுமி லார்கீரர்மு னுயர்செந்தமி ழாற்றுப்படை புகல்காலை

குலைபுங்கலை சோர்வார்கர மெனவந்தயில் வேற்கைப்பண்ட
விடுபுங்கவ னேராவென துரையுஞ்செவி யேற்றுக்கடல்
குடிகொண்டெழு தீயேகிகர் பயவெங்குகை சேர்த்துத்தினம் உடல்சோர

கனைகொன்றுணர் வோடுவது தபவந்தெழு கூற்றக்கடன்
ஒழியும்படி நூறுயிர முயர்செம்பொன்மண் மாற்றித்தரு
நறவும்படி பூவார்கழ லெனதொண்டலை சூட்டிப்பணி புரிவேனோ

கலைமொன்றறி யேனுயினு முனதன்பர்கள் கூட்டத்தொடு
பழகும்படி தானையரு ளனதென்செயல் போக்கித்துதி
நவிலும்படி நாமீதொரு கலைமங்கையை நாட்டித்தவம் அருள்வாயே

தகையொன்றுன தாள்பூசைசெ யொருவன்றடு மாற்றத்தொடு
பலர்முன்பிது நாள்பூரணை யெனவன்றவன் மாற்றப்படி
தமமொன்றும மாவாசையின் மதிவந்துற வாற்றித்திகழ் அபிராமி

தவரென்றகி நாண்மேருவை வளையந்தரி கூற்றைத்தெரு
பதபங்கய நாராயணி சிவைசங்கரி போற்றிபணி
தவர்நெஞ்சுறு மாதேவியென் மனமுந்திகழ் சீர்க்கொற்றவை சிவகாமி

தொகைகொண்டமை யாசேனைக ளொடுசென்றெழு பார்த்திக்குறு
பகைவென்றதி ரீசானிய கணம்வென்றரன் மேற்பெட்புறு
துணையென்றிக லாதேயருள் குணசுந்தரி வாட்பத்திரை கவுமாரி

தொடர்பைம்பொழில் சூழ்கோபுர நடுவொன்றிய தீர்த்தக்குளம்
அரவென்றிடு நாணார்மலை நடுவெண்கடல் போற்பொற்புறு
சுரருந்தொழு மாகூடலின் வளரம்பிகை சேற்கட்பரை உமையாளே.

(கு - ரை) ஆற்றுப்படை - திருமுருகாற்றுப்படை. கலை - உடுக்கை. உடுக்கை யிழந்தவன் கைபோல வந்து வேல்விடு புங்கவனென்க. உரை - பாட்டு. கூற்றம் - யமன். மண் - நன்செய் புன்செய். மாற்றல் - விலைப்படுத்தல். தமம் - இருள். ஒருவன் - அபிராமிபட்டர். தவர் - வில். அகி - பாம்பு. எழுபார் - ஈசானியமொழிந்த எழுதிக்குக்கள். கணம் - பூதகணம். குளம் - மதுரையின் கீழ்பாலுள்ள வண்டியூர்த்தெப்பக்குளம் அரவு - வாசுகி. மலை - மந்தரகிரி. வெண்கடல் - பாற்கடல். மாய்த்துத்தின்ன வருபூதம் - சண்டனேனோர் பூதமென்க. குறைபிலாராகிய நக்கீரரென்க. கூற்றமொத்தகடன் என்க. கடனெறியும்படி மண்ணை விலைப்படுத்துப் பல்லாயிரம் பொன்றந்த நின்கழலென்க. அபிராமிபட்டர் அமாவாசை யன்று களியாட்டயர்ந்து இன்று பௌர்ணமி யென்று தடுமாறிச்சொல்ல அவ்வுரையும் வழுவாவண்ணம் பலரறிய அவ்விரவிற் பூரணசந்திரனை வருவித்த அபிராமியேயென்க. தொகைகொண்டமையாவாகிய சேனைகளென்க. மேனாட்பெட்புற்ற துணைவனென்று நினைத்து அரனையிகலாதருளிய குணசுந்தரி யென்க.

பொழில் சூழ்ந்த கோபுரம் நடுவே பொருந்தியகுளம் அரவாகிய நாண் பொருந்திய மலையை நடுவேநட்ட பாற்கடல்போலப் பொற்புற்றகூடலென்க.()

தந்தன தந்தன தந்த தந்தன தந்தன தந்தன தந்த தந்தன
தந்தன தந்தன தந்த தந்தன தந்தன தந்தன தந்த தந்தன
தந்தன தந்தன தந்த தந்தன தந்தன தந்தன தந்த தந்தன தனதானா.

சங்கரர் கங்கைக ரந்து வண்சடை
தம்பிறை சிந்தைம றந்தி டும்படி
தஞ்சம றைந்து புலந்த நின்றுனி

 மதுரைமீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

சண்டன்முன் வெம்பனி யென்றொ ழிந்தனி
தந்தரு ளென்றுமொ ழிந்து வந்தவர்
தந்தலை கொண்டுவ ணங்கு நின்கழல் உதையாலே

சஞ்சல மின்றியொர் மைந்த னுய்ந்தொளிர்
சந்திர னென்றுட னம்பெ ரும்பொருள்
தம்படி வங்கெடு மன்று நின்றகி
தந்தவி ரின்புற முந்து தென்றிசை
தங்கிய வந்தக னைந்து பொன்றிய
சம்பிர மந்திகழ் துங்க வண்புகழ் புவிவானில்

எங்குநி றைந்தொளிர் கின்ற துண்டெனின்
என்சிறு சிந்தையு நின்ற துண்டினி
என்செய லொன்றிலை முன்பு வந்திடும்
இன்றமி ழொண்கடல் பின்பு றுங்கலை
இன்பொட டைந்தன வன்பு கொண்டுயர்
இங்கித நன்கமை சந்த வண்கவி பகர்வேனோ

இன்பொடு துன்பிலை யென்று நின்செய
லின்படி தங்குவ னெங்கு முன்கழல்
என்பறு புன்புழு வங்க வெம்பவம்
என்பது வந்துபொ ருந்தி னுந்தழ
லின்புடை னைந்துவ ருந்தி னுஞ்சுரர்
இன்பறு கர்ந்தும ருந்த ருந்தினும் மறவேனே

வங்கநெ டுங்கட லுண்ட கொண்டலும்
மங்குநி றந்திக ழும்பை யஞ்சுக
வஞ்சிய றந்தரு நங்கை யங்கணி
வம்புறு பைங்குழன் மஞ்சின் வந்தொளிர்
வண்பிறை மண்டில மொன்று சிந்துர
மங்கைம டங்கலின் முந்து மந்திரி மறைகாணு

வண்கழன் மண்பட வின்பு றுந்தனி
மன்றின டம்புரி கின்ற சங்கரி
வஞ்சர ழிந்திட வென்று விண்சுரர்
மன்பதை யன்பின்வ ணங்கி வென்றியும்
மன்றவ ரங்களு மென்று முன்பெற
வந்துவ னந்தனி னின்றி டுஞ்சய மகள்வாழி

வெங்கலை முன்செல வுந்து மம்பிகை
விஞ்சையர் பண்களு வந்த வஞ்செவி
மின்கொடி யென்பவ பந்தம் வெந்திட
மென்குயி லின்சொன்ம டந்தை செந்திரு
விந்தையொ டன்பின்வி ரைந்து நம்புமென்
விண்படர் சிந்தைபு குந்த சுந்தரி சிவகாமி

விஞ்சமர் வன்பின்வி லங்கு கொம்புடை
மிண்டனை வென்றுவி ளங்கு மங்கனை
விந்தநெ டுங்கிரி குன்றி யஞ்சிட
மென்கையின் முந்துபு ரிந்த புங்கவன்
விஞ்சைய ருந்தவ னுண்ட வொண்டமிழ்
ஒவஞ்செழி யன்பதி தங்கு மெண்குணி உமையாளே.

(கு-ரை.) துனி - புலவி சண்டன் - சூரியன். மைந்தன் - மார்க்கண்டேயர். என்று - சூரியன். ஐம்பெரும் பொருள் - ஐந்து தூல பூதங்கள். மடங்கல் - சிங்கம்.

வெங்கலை - விரும்பத்தக்க மான். சொன்மடந்தை - கலைமகள். விந்தை - சயமகள். அருந்தவன் அகத்தியனார். அங்கம் - உடல். மஞ்சு - மேகம்.

சங்கரர் சடையிற்கங்கை கரந்து தஞ்சம் அறைந்து, துனியொழிந்து அளிதந்தருளென்று மொழிந்து உவந்து, அவர்தந்தலையிற் கொண்டு வணங்கிய நின் கழலினுதையாலே மைந்தனுய்ந்து சந்திரனும் என்றும் ஐம்பொருளும் படிவங் கெடு மன்றும் நின்று அகிதந்தவிர்ந்த இன்புறும்படி அந்தகன் பொன்றிய புகழ் எங்கும் நிறைந் தொளிர் கின்றது உண்டென்க.

அப்புகழ் என்சிந்தையு நின்ற துண்டாதலின் தமிழுங்கலையும் அடைந்தன அதனாற் கவிபகர்வேனென்க.

என்றும் எங்கும் நின் செயலின்படி தங்குவ னென்க.

பொருந்தினும் வருந்தினும் அருந்தினும் உன்கழல் மறவேனென்க.

சூழலென்னுமஞ்சின்கணொளிர்கின்ற பிறைமண்டிலமென்னும் நுதலிற் பொருந்திய சிந்தூர திலகமுடைய மங்கையென்க.

சுரரும் மன்பதையும் வணங்கி வஞ்சரழிந்திட வென்று கருதி வென்றியும் பிற வரங்களும் பெறுமாறு வனத்தில் வந்து நிற்குஞ் சயமகளென்க.

என்பவ பந்தங் கெடச் சொன் மடந்தை திரு விந்தை யென இம் மூவருடன் என் சிந்தை புகுந்த சுந்தரி யென்க.

விலங்கி னுருவத்தை யுடைய கொம்புடைய மயிடா சுரனென்க. புங்கவனாகிய அருந்தவனென்க. (கூ௦)

௪௮ மதுரை மீனாட்சியம்மைசந்தத் திருவடிமாலை.

தாத்தத்த தத்தான தந்தனந் தானன
தாத்தத்த தத்தான தந்தனந் தானன
தாத்தத்த தத்தான தந்தனந் தானன தனதானா.

சேற்கொத்த பொற்பாரு மஞ்சனந் தோய்விழி
வேற்பட்டு நற்பால்பு குந்துறுங் கூர்மதி
தேய்த்துத்து ளைத்தேவி முங்கநின் றேதினம் உழலாதே
சீர்த்திப்பொ ருட்கூறு பண்புறும் பாவகை
யாட்சித்தி ணைக்கூறொ டைந்தெனும் பால்வினை
தேர்ச்சித்த னித்தூய பண்பெறுஞ் சீரிசை யுடனாடல்

பார்க்கிற்ப டைப்போடு முந்துகொண் டேசிவன்
வேற்கைப்ப டைச்சாமி நெஞ்சினும் போய்வளர்
பாற்பட்ட முத்தூய சங்கமுந் தோய்தமிழ் அமிழ்தாழி
பாய்த்துத்தி ளைத்தாடி யுண்டுணர்ந் தேயுயர்
மார்க்கத்தி னுற்றேசி றந்தநின் றாண்மலர்
பாட்டுக்கண் முற்பாடி யென்சிரஞ் சூடிட அருள்வாயே

கார்க்கொத்த முற்றேய முண்டவெந் தீதின்முந்
நீர்ப்பற்றல் விட்டேயி டந்தொறும் போகிநெல்
காய்ப்பச்செ றுத்தோறு நின்றிடுஞ் சீர்நதி கடன்மேவு
காழ்ப்புச்செ ருக்கோட முன்சினந் தேசிறை
சேர்த்துத்த டுத்தேவ வெங்கணும் பாய்பல
காற்பெற்று மிக்கோடு துங்கவண் பேர்நதி வளமேவு.

நாற்பத்து முக்கோண யந்திரம் போலமை
யேற்றத்தி னெத்தேவ ருந்தொழுஞ் சீர்திகழ்
நாத்திட்ப முற்றோர்நி றைந்தொருங் காய்தமிழ் வளர்கூடல்
நாற்பக்க முற்கோபு ரங்களுஞ் சேணுறு
சீர்த்தகக பொற்பார்பொ ருந்துறுந் தூணென
நாட்டுற்ற நற்கோயி றங்குநஞ் சேல்விழி உமையாளே.

(கு-ரை.) வேற்பட்டு - வேல்பாய்ந்து. நற்பால் - அறப்பகுதி. பொருட்கூறு - எழுதிணைகளையுடைய அகப்பொருளும் புறப்பொருளும்.

பாவகை - வெண்பாமுதலாய நாற்பாவும் அவற்றின் வகைகளும்.

திணைக்கூறு - உயர்திணையும் அஃறிணையும்.

ஐம்பால்-ஆண்பால் முதலாய ஐந்து. ஆடல் - நாடகம். தமிழ் அமிழ்து ஆழி - தமிழாகிய அமிர்த சமுத்திரம்.

பாய்த்து - பாய்ந்து என்பது விகாரமாயது.

முற்றேயம் - கடல்கொண்ட தென்மதுரையும் அது சூழ்ந்த நாற்பத்தொன்பது நாடும் குமரிமலை பஃறுளியாறு முதலாயவும் சேர்ந்த தென்வடல் எழுநூற்றுக்காவத நீளமுள்ள ஒரு பெரிய தமிழ்த்தேசம். இது பல தேயத்தாருக்கும் பல பாஷைக்காரருக்கும் ஆதிப்பிறப்பிட மாதலின் முற்றேய மெனப்பட்டது.

முந்நீர் - கடல். செறு - வயல். சீர்நதி - வையையாறு. சிறைசேர்த்து - அணைகட்டித்தேக்கி.

பேர்நதி - பெரியாறென்று வழங்கு முல்லையாறு.

பொற்பார் - அமராவதி.

விழியாகிய வேல்பாய்ந்து மதியைத் தேய்த்துத்துளைத்துவிழுங்க நின்றுழலாமற் பிறபாஷைகளிற் காணப்பெறாத சீர்த்தியமைந்த பொருளிலக்கணமும் பிறவும் படைப்புக்காலந்தொட்டே தன்னிடங் கொண்டு திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள் நெஞ்சினும் குன்றெறிந்த முருகவேள் நெஞ்சினும் போய் வளர்கின்ற முச்சங்கமுந் தோய்ந்த தமிழாகிய அமிர்த சமுத்திரத்திற் பாய்ந்து ஆடியுண்டு உணர்ந்து பாடிச் சூடிட அருள்வாயென முடிக்க.

கடல்கொண்ட தமிழ் நாடு இப்போதுள்ள பல தேயத்தார்க்கும் ஆதியிற் கல்வி செல்வம் நாகரீகம் ஒழுக்கமுதலாய பல்வகை நன்மையளித்த நாடாதலின் அது பற்றிக் கார்க்கொத்த முற்றேயம் எனப்பட்டது.

இத்தகைய கார்க்கொத்த முற்றேயத்தைக் கடலுண்டமையின் அத்தீமை கருதி அக்கடலிற் சேற லடாதென நீங்கி இடந்தொறுஞ் சென்று நெல் விளையும்படி வயல்களெல்லாம் நிலைபெறுஞ் சீரினையுடைய வையை யாறென்க.

முற்றேயமுண்ட தீமையை நினையாது கடலிலேசென்ற செருக்குநீங்கும்படி சினந்து சிறைச்செய்து கடலிற் செல்லாது தடுத்து இப்போதுள்ள தமிழ் நாட்டிற் செல்லும்படி அத்தீமையை மறவாத மக்கள் ஏவுதலால் எங்கணும் பாய்கின்ற பல கால்கள் பெற்று மிக்கோடுகின்ற உயர்ந்த ஈகையுடைய பெரியாறென்னு முல்லையாறென்க.

வையையாற்றின் வளமும் பெரியாற்றின் வளமும் மேவிய கூடல் நாற்பத்து முக்கோண யந்திரம்போல உருவமைந்த கூடல் எத்தேவருந் தொழுங் கூடல் தமிழ் வளர்கூடலென முடிக்க. (ந.க)

ரு௦ மதுரை மீனாட்சியம்மை சந்தத் திருவடிமாலை.

தானன தந்த தனதத்த தானன
தானன தந்த தனதத்த தானன
தானன தந்த தனதத்த தானன தனதானா.

சோழனை வென்ற நகருற்ற பாவலன்
மாணிசை கொண்ட வரசப்ப வேளருள்
சூனுவு யர்ந்த நிஜதற்பின் மேயசண் முகனாள்கோள்
சூழ்பகை முன்செய் வினைபற்பல் பேய்பிணி
தீமிடி நஞ்ச மடமச்ச மாதிசெய்
தோமற நன்றி பலபெற்று வாழ்வுற அரன்மேவு
தோழன்வி ரிஞ்ச னெனவத்த நூல்பெற
ஆழறி றைந்த மதிபத்தி மேவமெய்
தோய்வுற வென்றி பெறமற்றை ஞானமும் உறவோது
தூயன சந்த முறுமுப்ப தோடிரு
பாவும்வி ளைந்து நவில்பெற்றி யோர்துயர்
தூரவ கன்று நலமுற்று மேவிட அருள்வாயே
வேழமு கங்கொள் பரனெற்றை வாலிய
போர்புரி கொம்ப னெனதத்தன் வேலவன்
வேதனை முன்பு சிறைவைத்த நாவலன் உயர்மாதா
மேருவில் கொண்ட பரைசத்தி மாயவன்
ஆகிய னந்தன் மிசையுற்ற நாரணி
வேரிகொள் கஞ்ச மலருற்ற தாளிணை எழுபானாள்
வாழ்வுற வென்றன் முடிவைத்த கோமகள்
பூவுறை செம்பொன் விழிவைப்ப நாமகள்
வாய்வர வென்ற னகமுற்ற மாதவி வளர்கூடல்
வாசவன் முன்பு நிருமித்த கோயிலின்
வாழ்சிவை கங்கை சடைவைத்த வீசனை
மாமண மொன்ற வருவித்த சேல்விழி உமையாளே.

(கு- ரை.) சூனு - மகன். மெய் - உண்மை நெறி. எழுபானாள் - உபாசனை செய்யத் தொடங்கிய எழுபதாவது நாள். பாவலனுஞ் சூனுவு மாகிய சண்முகன் நாளாதிய செய்கின்ற தோமறவும், வாழ்வுறவும், அரன்றோழ னென்ன அத்தம் பெறவும், விரிஞ்சனென நூல் பெறவும், மதியும் பத்தியு மேவவும், மெய் தோயவும், வென்றி பெறவும், ஞான முறவும் ஓதிய முப்பத்திரண்டு பாக்களையும் நவில்வோர் துயரினின்றுந் தூர நீங்கி நன்மை முற்று மடையுமாறு அருள்வாயென்க. துயர் தூரும்படி நீங்கி யெனினுமாம். (ரு௨),

திருவடிப் பத்து.

வெண்பா.

அண்டம்பல் கோடி யகட்டோ ரணுவென்னக்
கொண்டாய்க்கு நுண்படிவங் கூறினணு—அண்டமொக்கும்
என்றான் மதுரைக் கிறைவிகொண்டு வர்ழ்த்தலெங்ஙன்
என்றானு மேற்றா ளிணை. (௧)

ஆலவா யண்ண லருந்திய வாலத்தை
வாலமுத மாக்கியவென் மாதாவின்—காலன்றோ
உள்ளத் திரியா வுழுவனெய் தோய்ந்துநணை
உள்ளத் திரியா ரொளி. (௨)

இருக்கிசைத்த நூபுரத்தாள் யான்றலைக்கொண் டன்பின்
பெருக்கிலழி ழாதென் பிறந்தேன்—திருக்கழல்சார்
கல்லாய்ப் பிறந்திலேன் காமாரி கூடலிலே
நல்லாய் மணம்புரிந்த ஞான்று. (௩)

ஈரம் படைத்த விதயமு மெக்காலும்
ஓரம் படையா வொருநாவும்—காரென்ன
ஈகையும் பெற்றா ரிருக்குந் திருக்கூடற்
றோகையடி சேர்மின் றொழுது. (௪)

உலகுண் டுமிழ்கொண்ட வும்பர்பிரான் றங்கை
அலகி லுயிர்க்குயிரா கண்ணல்—வலமுற்ற
தேவிக் கடித்தொண்டு செய்து புகழ்பாடிப்
பாவிக்க கூடற் பதி. (௫)

ஊரார்க் குரைப்பே னுரைத்தபடி யானடவேன்
நீராற் றெதிரேடு நீந்தச்செய்—ஊராளும்
அன்னையே காத்தா லறத்துக் கிழுக்கென்னை
என்னையே காத்தா யெனின். (௬)

என்று நிலாவு மெரியுமே நோக்காக
என்று நிலாவு மிறைவியுமை—பொன்றுந்

கூடற்கு மாரி குயின்றேற்கு மாரியைதாள்
பாடற்கு மாரியவள் பண்பு. (எ)

ஏழையான் பட்ட விடும்பைக் கடனீந்த
வாழி கலமாக வாய்த்ததே— பூழியர்கோன்
நற்புத் திரியார் நபமொடுங்குங் காலத்தும்
அற்புத் திரியா ரடி. (அ)

ஐய மிடாதை யருக்கன் மகனென்று
பொய்யே புகலும் புலவீர்காள்—பொய்யர்
மொழிகொண்ட கூடன் மொழிமின் கயல்போல்
விழிகொண்டாள் காலில் விழுந்து. (கூ)

ஒன்றே பலவோ வுளதோ விலதோவென்
றின்றேபன் ஞளு மினைநெஞ்சே—நன்றே
தருக்க வுரைகேட்டுத் தளராதே கூடற்
றிருக்கவுரி நற்றாளே சேர். (க0)

உ

சோழவந்தான்

சிதம்பர விநாயகர் மாலை.

சீரார் சனகைச் சிதம்பரவி நாயகன்மே
லேரார் கவிமாலை யான்பாட—நாரார்
அடியார்கட் கெல்லா மருளுமவ் வையன்
கடியார் மலர்ப்பதமே காப்பு.

அருவா யுருவா யகிலமுமா யெங்குநிறை
பெருவாழ்வே நின்பெருமை பேசுவது மெப்படியோ
குருவா யெனதுமனக் கோயில் குடிகொண்ட
திருவாழ் சனகைச் சிதம்பரவி நாயகனே. (க)

ஆணகிப் பெண்ணு யலியா யருமறையுங்
காணும னின்றனைக் காண்பதுவு மெப்படியோ
ஏணர் வளஞ்சே ரெழிற்சோழ வந்தானிற்
சேணுடர் போற்றுஞ் சிதம்பரவி நாயகனே. (உ)

இந்துமா வும்புனைந்தா யீறிலடி யார்மொழிபோற்
சிந்தை மகிழ்ந்தென் சிறுசொல்லுங் கேட்டருள்வாய்
நிந்தனையி லாத நெறியோ ருறுஞ்சனகைச்
செந்துவர் மேனிச் சிதம்பரவி நாயகனே. (௩)

ஈத லிசைபெறுத லெக்காலு நின்புகழே
யோதலிவை நாயே னுறப்பணிப்ப தெக்காலம்
காதல் வெறுப்பில்லாக் காட்சியர்கள் வாழ்சனகைச்
சீதமதி சூடுஞ் சிதம்பரவி நாயகனே. (௪)

உடல்பொருளோ டாவி யுவந்தளித்தே னென்றனைக்கை
விடலுனக்கு நானடிமை விண்ணோர் பெருமானே
மடலார் கமுகை மறைப்பச்செஞ் சாலிவளர்
திடமார் சனகைச் சிதம்பரவி நாயகனே. (௫)

ஊதையுறு பஞ்சா யுழலு மடியேனைத்
தாதைநீ காவாது தாமதிப்ப தென்னேயோ
வாதையிலா நற்சோழ வந்தான்றெற் குத்தெருவிற்
றீதையிலார் வாழ்த்துஞ் சிதம்பரவி நாயகனே. (௬)

என்காலு மெட்டு மிதுவென் றறியாதேன்
கண்காண நின்படிவங் காட்டுநா ளெந்நாளோ
மண்காண விண்காண வந்து சனகைவளர்
திண்கா ரியற்கைச் சிதம்பரவி நாயகனே. (௭)

ஏவா மலரா விழுதையென வென்னெஞ்சம்
ஓவா தருகுமினை லோட்டுவது மெந்நாளோ
யாவாணர் பாடிப் பரிசு பெறுஞ்சனகைத்
தேவர்தி தேவா சிதம்பரவி நாயகனே. (௮)

ஐயா நிரப்பிடும்பை யாலறிவு குன்றுமற்
செய்யா ளருணோக்கஞ் செய்யவருள் செய்வாய்நீ
மெய்யார் சனகை விமலன் றிருப்புதல்வா
செய்யாத மேனிச் சிதம்பரவி நாயகனே. (௯)

ஒன்று யிரண்டாகி யொன்றிரண்டா யன்றாகி
நின்றாய்நின் றன்மை நிலைகாண வல்லேனோ

பொன்றா வருளாற் புரந்தரற்காய்க் காகமெனச்
சென்றாய் சனகைச் சிதம்பரவி நாயகனே. (கo)

ஓயாப் பிறவி யுவரிக் கரையேறி
வீயாச் சுகவெளியை மேவுவது மென்னாளோ
தாயாகித் தந்தையாய்ச் சற்குருவாய்ச் சிற்பரையின்
சேயாய்த் திகழுஞ் சிதம்பரவி நாயகனே. (கக)

ஔவையார் வெள்ளி யசலத் துறப்புரிந்த
செவ்விய நின்கருணை செப்புந் திறனேயோ
கௌவைநீர் ஞாலத்தின் கண்ணோர் சனகைவளர்
தெவ்வையடு கோட்டுச் சிதம்பரவி நாயகனே. (கஉ)

கள்ளமனத் துக் கடையேனு முன்கருணை
வெள்ளத்துண் மூழ்கியின்ப மேவவருள் செய்வாயோ
வள்ளலே யெல்லாமும் வல்லாயுன் சித்தமதைத்
தெள்ளேன் சனகைச் சிதம்பரவி நாயகனே.

அங்கண்மா ஞாலத்தோ டண்டமெல் லாமகட்டிற்
றங்குநீ யென்னுள்ளந் தங்குவது மெப்படியோ
எங்கு மணிக ளிரவொழிக்குந் தென்சனகைச்
செங்கண்மால் போற்றுஞ் சிதம்பரவி நாயகனே.

சனகர் மயக்கந் தவிர்த்துஞா னங்கொளுத்துந்
தினகரவெ னுள்ளத் திமிரமுநீ போக்காயோ
அனகருமை வேளாண்ட வாலவாய் சார்சனகைச்
சினகரத்தில் வாழுஞ் சிதம்பரவி நாயகனே.

ஞமலிநா வன்னவடி நாரியர்க ளாசைத்தீ
இமையுமென் சித்தமுறா வின்பருள்க நற்சனகை
அமர்வாயோர் கோட்டா லரும்பா ரதப்போர்பொற்
சிமையத் தெழுதுஞ் சிதம்பரவி நாயகனே.

இடம்பொருளோ டேவலளித் தின்பநிலை கைகூட்டி
மடங்கெடுத்து மெய்ஞ்ஞான வாழ்வுந் தருவாய்நீ
தடம்பொழில்சூழ் வைவை தழுவுஞ் சனகைநகர்த்
திடம்பரவு முக்கட் சிதம்பரவி நாயகனே. (கஎ)

இணரார்மந் தார மெருக்கறுகு வன்னியிவை
தணவா தணிவாய் தமியனையுங் காத்தருள்வாய்
பிணிமுகமூர் வேற்கைப் பெருமாற்கு முன்றோன்று
திணிதோட் சனகைச் சிதம்பரவி நாயகனே. (௧௮)

தந்தா வளந்தான் றனையழைப்பச் சென்றபயந்
தந்தா வளந்தாவத் தாழ்வரைக்கை கொண் டுலகைச்
சிந்தா வளந்தான் றிருமருகா நாயேற்குச்
சிந்தா வளந்தர் சிதம்பர விநாயகனே (௧௯)

நன்மையாய்த் தீமையாய் நாளாகிக் கோளாகி
யுன்மையுமாய் நின்று யடியேனை யாண்டருள்வாய்
தொன்மையதாய்ச் சீர்படைத்த சோழவந் தானகர்வாழ்
சின்மயனே நால்வாய்ச் சிதம்பரவி நாயகனே. (௨0)

பகழிமலர் தூற்றியெதிர் பாதகனுக் கஞ்சாமற்
புகழிறைஞ்சு நின்பதமே பூசிப்ப தெந்நாளோ
அகழியுறு செல்வினத்தை யானையின மென்றடையத்
திகழுஞ் சனகைச் சிதம்பரவி நாயகனே. (௨௧)

மற்குறித்த நாற்றோளும் வான்புழைக்கை யொன்றுமுள்ளாய்
எற்குத் துணையா யிருப்பதுன்றன் றண்ணளியே
கொற்கைநேர் சோலை குறிச்சியெ னுஞ்சனகைத்
தெற்குத் தெருவாழ் சிதம்பரவி நாயகனே. (௨௨)

இயலாதி முத்தமிழு மற்று மெனக்குணர்த்தி
மயலாதி நீக்கியெனை வாழ்விப்ப தெந்நாளோ
கயலார் படுகர்க் கழனிச் சனகையிற்செஞ்
செயலார் பரவுஞ் சிதம்பரவி நாயகனே. (௨௩)

அரதனமுங் கல்லுமிணை யாமதித்து நின்பதமே
வரதனமாக் கொண்டு மகிழ்ந்திருப்ப தெந்நாளோ
சாதநல மிக்க சனகையில்வாழ் வானரயெலாந்
திரதனதன் போற்செய் சிதம்பரவி நாயகனே. (௨௪)

இலகுமணிப் பூணார மேந்து மிளநகையார்
கலகவிழி மையல் கடக்குநா ளெந்நாளோ

உலகி னுயர்சனகை யோங்கவள ரோர்கோட்டுத்
திலக வதனச் சிதம்பரவி நாயகனே. (௨௫)

வசையிலா வாழ்வும் வழங்கும் பெருவளனும்
அசையா வறிவு மரோகதிட காத்திரமும்
இசையுந் தமிழுமரு ளெந்தாய் சனகையினிற்
றிசையெலாம் போற்றுஞ் சிதம்பரவி நாயகனே. (௨௬)

அழனு மதியு மருக்கனுமூ வம்பகமாய்த்
தழையுஞ்சி தானந்த சத்தே கருணைமதம்
பொழியும் புகர்முகத்துப் புண்ணியனே காத்தருள்வாய்
செழியன் சனகைச் சிதம்பரவி நாயகனே. (௨௭)

இளையார் விழிவாட் கிலக்கா யழியாமல்
விளையும்பே ரானந்த வெள்ளத்துண் மூழ்கவருள்
அளிகொண் மடவார்பா லன்ன நடைகற்றுத்
தெளியுஞ் சனகைச் சிதம்பரவி நாயகனே. (௨௮)

அறனார் வருநாளு னம்புயத்தா ளென்னெஞ்சி
னுறநா யகனே யொருவரநீ தந்தருள்வாய்
அறனாடு கூந்த லரிவையரு நூற்புலமைத்
திறனார் சனகைச் சிதம்பரவி நாயகனே. (௨௯)

அனகனே யெண்குணனே யழியாத தத்துவனே
பனக வணியானே பாசாங் குசதரனே
கனக மிகுசனகை காக்கின்ற மெய்ஞ்ஞான
தினகரனே முக்கட் சிதம்பரவி நாயகனே. (௩௰)

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௮	௨௧	நால்கவி	நால்கவி
௧௩	௬	கோயிலு	கோயிலிலு
,,	௧௪	களவிலுரை	களவியலுரை
௧௫	௩௩	யருள்கூடல்	மருள்கூடல்
௧௭	௨௯	கிளபாடிட	கிளிபாடிட
௧௮	௬	வந்தேன்	வந்தோன்
௧௯	௫	அணைய	அனைய
௨௫	௧௪	நடவு	நடுவு
௨௬	௧	வாலை	மாலை
,,	௬	தோய்வு	தோய்வுற
௨௮	௧௬	னெண்க	னென்க
௩௧	௧௪	பண்பேபோல்	பண்பேய
,,	௨௰	விலையுள்	விளையுள்
௩௫	௨௰	நானுறை	நானுரை
௩௮	௨௯	இராவனனை	இராவணனை
௪௫	௫	தெரு	தெறு
,,	௯	வென்றதி	வென்றெதி
௪௭		சந்த	சந்த
௪௮	௯	தினைக்கு	திணைக்கு